இந்தத் தகருர்களைத் தீர்க்கவும், ஒற்ற சம்பந்தம் ஏற்படுத்தவும் முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு பின்னும் 1926-ம் வருஷம் ஜூலை மாதத்தில் பாடு அரசன் இங்கிலாந்துக்குச் சென்றபோது அவரை அன்புடன் வரவேற்றியதின் மூலம் இவர்களுடைய ஸ்நேகபாவத்தைப் பலப்படுத்தப் பிரயாசைப்பட்டார்கள். பிரிடிஷ் மந்திரிகளுக்கும், அச்சமயம் இங்கிலாந்திருக்க நேர்ந்த சில எகிப்திய பிரமுகர்களுக்கும் நடந்த ஒரு சாதாரண சர்ச்சையின் பயனாக 1927-ம் ஆண்டில் ஒரு உறவு உடன்படிக்கை தயாரிக்கப்பட்டது. ஆனால் இதை பிரதிகாரியத்துவக் கூட்டம் (wafdists) ஆமோதிக்கவில்லை. இருந்தபோதிலும் "பாடு" அரசன் தன்னுடைய ஸ்தானதிபத்திய ஸாமார்த்தியத்தினால் இந்த கஷ்டங்களை விடுவித்துக்கொண்டார்.

பிந்தினகாலம்.

எகிப்தின் பிற்கால ராஜீய சரித்திரமானது ஷாகுல்பாஷா, நாஹாஸ்பாஷா, சுவிட்பாஷா மஹமட், மாமட்பாஷா, இதுபோன்ற இன்னும் அநேகம் தலைவர்களின் கபடச் செய்கைகளும், அவைகளுக்குப் பதில் செய்கைகளும், அதனால் ஏற்பட்ட உத்தியோக மாற்றங்களும் அடங்கிய ஒரு குழப்பமான கதையேயாகும். இவைகள் இந்தப் பிரசங்கத்திற்கு அவசியமானவைகளுமல்ல, அல்லது தற்பொழுது இருக்கும் ராஜீய வகுப்பினர்களான, வாபிடிஸ்ட்ஸ், (ஸாடிஸ்ட்ஸ்; நஹாஸைட்), இட்டிஹாட், ஷாப், அரசாட்சிக்கு ஏற்ற தியாகமனமுள்ளவர்களின் வகுப்பு, சுயேச்சையைக் கோருகிறவர்களின் வகுப்பு, வாபிடிஸ்ட்ஸ்க்கு எதிராகக் கிளம்பிய நீல உள்ளுடை கூட்டத்தார்கள், இவர்களை அடக்க பாட் அரசனால் ஏற்படுத்தப்பட்ட பச்சை உள்ளுடை வகுப்பினர்கள், இதாலியர்களால் ஸ்தாபிதம் செய்யப்பட்ட கருப்பு உள்ளுடை சங்கம்—மேலே சொன்ன மூன்று உள்ளுடை சங்கங்களும் இப்பொழுது தடை செய்யப்பட்டுவிட்டது—இவைகளின் உற்பத்தியும், வளர்ச்சியும், இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்வதும் இனமாகாது.

பரோக் அரசன்.

1936-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் பாட் அரசனின் மரணத்தால், ஒரு மிகவும் சாமார்த்தியவானும், தீக்ஷண்யமாய் ராஜாங்கமுறையை அறிந்தவனும், எகிப்து ஜனங்களின் நடத்தையையும், ஆத்மதத்துவத்தையும் நன்கு உணர்ந்தவனுமான ஒரு அரசரை இழக்கும்படி ஏற்பட்டது. அப்பொழுது இங்கிலாந்தில் படித்துக்கொண்டிருந்த அவருடைய 16 வயதுள்ள புதல்வன் பரோக் அரசன்

உடனே எகிப்துக்கு திரும்பிவர நேர்ந்தது. அப்பொழுது ஏற்பட்ட ராஜப் பிரதிநிதியின் ஆக்ஷிகாலத்தில் எகிப்தின் பதவி இரண்டு வழிகளில் உயர்த்தப் பட்டது—ஒன்று மாண்ட்ரீக்ஸ் சங்கேதப்படி "ஒப்படைப்பு நீதிஸ்தலம்" எடு பட்டதும், மற்ருென்று கூட்டுறவு நாடுகளில் எகிப்தையும் ஒரு அங்கத்தினராகச் சேர்த்துக்கொண்டு, ஒரு புதிய ஆங்கில எகிப்திய உடன்படிக்கையை 1936-ம் வருஷம் ஜுலை மாதம் செய்துகொண்டதுமாகும். பிறகு 1937-ம் வருஷம் ஜுலை மாதத்தில் இளவரசன் பரோக் மேஜரானவுடன் அரசனுகச் சாற்றப் பட்டார். இவர் ஒரு நற்குணம் வாய்ந்த விவேகமுள்ள இளைஞர். ஏற்கனவே தன் பிரஜைகளின் பிரியத்தைச் சம்பாதித்துக்கொண்டவர். இரண்டு வருஷங் களுக்குமுன் இவருடைய கலியாணம் நடைபெற்றபொழுது எகிப்து தேச முழுமையுமே மேற்படி வைபவத்தைக் கொண்டாடினுர்கள். இவரும், ராணியும், இவர் சிறுகுழந்தையும் எகிப்தியர்களால் பூஜிக்கப்படுகிறுர்கள்.

பிரதேச நிதி.

சமீபகாலமாக எகிப்தின் பிரதேசநிதி பிரிடனுக்குப் பலமாக அனுகுண மாகவே யிருந்து வருவதோடு, இந்த யுத்தமாரம்பமுதல் அது பிரத்தியக்ஷமாக அச்சுநாடுகளுக்கு எதிராகச்சண்டை தடராவிட்டாலும், பிரிடனுக்கு நேரிலும், மறைமுகமாகவும் ஒத்தாசை செய்து வருகிறது. சென்ற ஆகஸ்டு மாதத்தில் எகிப்தின் யுத்த மந்திரி கெய்ஸி பாஷா என்பவர் "எகிப்திய சேனைகள், படை யெடுப்பவர்களுக்கு விரோதமாக பிரிடனுடன் நாலாவிதத்திலும் இருந்து வரும். நாங்கள் முதலில் சண்டை ஆரம்பம் செய்யமாட்டோம், ஆனுல் எங்களைத் தாக்கினுல், நாங்கள் எங்கள் கூட்டாளியான பிரிடனேடு சேர்ந்து எங்கள் நாட்டின் பாதுகாப்புக்காகச் சண்டையிடுவோம்" என்று கூறினுர். இந்த விஷயம், சென்ற நவம்பர் மாதம் 14-ம் தேதி யன்று (சரியாக ஒரு மாத முன்) பரோக் அரசனுல் பார்லிமெண்டு சபையை திரந்து வைக்கும்பொழுது செய்த ஒரு பிரசங்கத்தினுல், இன்னம் ஸ்பஷ்டமாகத்தெரிகின்றது. அதாவது "இந்த தீராப்பகையான யுத்தத்தில், எகிப்தானது, முன் எச்சரிக்கையின் தூண்டுதலாலும், புத்தியின் கட்டளையாலும், ஆத்ம ரக்ஷண அவாவாலும், தன் கடமையைச் செய்யவேண்டிய அவசியத்தினுலும்,............இவைகளுக்கு அனுகுணமான ஒரு நிலையைக் கைக் கொண்டு பிரிடனுடன் ஒரு ஸ்நேக உடன்படிக்கையில் மனப்பூர்வமாய் சேர்ந்திருக் கிறது" என்று பேசியிருக்கிறுர். இவ்விஷயத்தை சபாமண்டபத்தில் படிக்கும் பொழுது பிரதம மந்திரி ஹஸான் ஸாப்ரி பாஷா திடீரென்று கீழே விழுந்து இறந்தார். மூன்று நாள் கிரமித்து அதாவது நவம்பர் மாதம் 17-ம் தேதி, புதிய பிரதம மந்திரி ஹுஸ்ஸின் ஸிர்ரீ பாஷா என்பவரும், தானும் அரசனுல் செய்யப் பட்டிருக்கிற பிரசங்கத்தின் கருத்துக்கிசைந்தாப்போல் நடந்து கொள்ளப் போவ தாக வெளியிட்டார்.

எதிர்ப்பின் அபாயங்கள்.

இந்தப் பிரகடணங்களின் நோக்கம் பிரிடனுடனும் அதின் நேசநாடுகளுட னும் நெருங்கியதும் சுறுசுறுப்புமான யுத்த சம்பந்தத்தைத் தானுகவே அறிவிக் கிறது. ஆகவே அச்சு நாடுகளுடன் தற்காலம் செயலற்றவாயினும், குறிப்பிட்ட

விரோதத்தையே உண்டாக்கிறது. கெயிரோவில் ஈடன் துரை சமீபத்தில் நீண்ட காலம் தங்கினது பிரிடிஷ் ராஜாங்கத்தார் எகிப்தின் அனுதாபத்தை விசேஷமாகக் கருதுவதைக் குறிப்பதுடன், சீக்கிரமே சண்டையில் எகிப்து சுறுசுறுப்பாகச்சேர்ந்து நடக்கச்செய்யும் அவசியத்தையும் அனுமானிக்கப்படு கிறது. பொதுவாக, இப்பொழுது இருக்கும் நிலைமையைப் பார்க்கச் செய்தல், எகிப்தை மிகவும் சுலபமாகத்தாக்கி சேதப்படுத்தும் நிலைமையிலிருப்பதாகக் காணப்படுகிறது. அதை எந்தப் பக்கங்களிலிருந்தும் தாக்கக்கூடும். மூன்று பக்கங்களில், தரை, கடல், ஆகாயம் இவைகளிலிருந்து தாக்கலாம். ஆனால், வாதத்தில் இது கூடுமானாலும், நடப்பில் இந்த அபாயத்தின் பெரும் பாகத்தைத் தள்ளி விடலாம். தற்காலம், மத்தியதரைக்கடலில் பிரிடிஷ் கப்பலின் ஆதிக்கம் இணையில்லாமல் மேலாகயிருப்பதாலும், கிரீஸ் சண்டையில் இத்தாலி அபாயகரமாக தோல்வியடைந்து தைரியம் குறைவுபட்டதாலும், வடபாகத்திலிருந்து எகிப்தைத் தாக்குவது சம்பாவிதமில்லை யென்று சொல்லலாம். கிழக்கு வடகிழக்கு இந்தப் பக்கங்களிலிருந்து தாக்கும் சௌகரியங்களை நெடுங்காலமாகச் சர்ச்சைசெய்து, நடப்பில் இதாலியின் சில முயர்ச்சிகள் பிரயோஜனப்படாதிருந்தும், இதே காரணங்களுக்காக மேற்கண்ட திசைகளிலிருந்து தாக்கப்படும் அபாயங்களைப் பற்றி நாம் கொஞ்சமும் பொருட்படுத்தாது நிச்சிந்தையாக இருக்கலாம்.

லிபியன் பாலைவனம்.

மேற்கே பெரிய லிபியன் பாலைவனமிருக்கிறது. இதின் வரண்ட மணல்கள் எந்த யுத்த சைன்னியங்களுக்கோ, சன்னாகத்திற்கோ இயல்பான பெருத்த தடையாகின்றன. தற்காலத்திய ராணுவபட்டாளம் இந்த ஜடமான தடையை ஜயத்துடன் கடக்க முடியுமா என்பது சந்தேகிக்கத்தக்கதே. இந்தப் பக்கத்தில் தாக்கக்கூடிய ஒரு வழி கடற்கரை ஓரமேயாகும். இதற்குச் சௌகரியமாக ரயிலும் பாதையும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த வழியாகத் தற்காலத்திய ராணுவப்படையைக் கொண்டுபோவது, அதிலும் எதிர்க்கும் சைன்னியமும், பக்கத்தில் உபத்திரவப்படுத்தக் கப்பற்படையுமிருக்குமின், மிகவும் அரியதாகும்.

கிடைக்கும் சமாசாரங்களிலிருந்து, மார்ஷல் கிராஸியானி என்பவர் இந்த விஷயத்தை அதிக நஷ்டத்தின் பேரில் ஏற்கனவே அறியச் செய்திருக்கிறார் என்று தெரிகிறது. சென்ற செப்டம்பர்மீ 15வ இவர் சைன்னியங்கள் சோலம் (Sollum) என்ற இடத்தில் அமர்ந்து மருநாள் லிபியன் கடற்கரையோரமுள்ள ஸித்திபராணி (Sidi Barrani) என்ற ஊரை பிடித்தார்கள். அதேதினம் ரோமாபுரி ரேடியோ "மூன்று நாட்களுள் அலக்ஸாண்டிரியா விழுந்து விடுமென்று" குறிசொல்லியது. ஆனால் இதாலியர்களோ நாலு மாதமாகியும் இன்னும் அந்தக் காற்றுவீசப்பட்டுள்ளதும், கடற்கரையோரத்தில் அலக்ஸாண்டிரியாவிலிருந்து 250 மைலுக்கு அப்பாலுள்ளதுமான ஸித்திபராணியிலேயே இருந்து வருகிறார்கள். இந்த இடத்தில் ஸதா கடலிலிருந்தும், ஆகாயத்திலிருந்தும் தவறாமல் தாக்கப்பட்டு வருகிறார்கள். இதாலி சிந்தித்த படையெடுப்பு இன்னமும் முற்று பெறாமல் தொங்கிக்கொண்டிருக்கிறது.

எதன் மத்தியில், எகிப்து நகரான ஸோலத்தை (Sollum) இதாலியர்கள் பிடித்ததுமூலம், எகிப்து நேரில் யுத்தத்தில் சேரும் பிரச்னையை கிளப்பி விட்டது. ஆனல், இது காரணமாக எகிப்து சண்டையில் இறங்கும்படி முக்கிய விஷயமில்லை என்று தீர்மாணிக்கச்செய்தது. இந்த இதாலியின் செய்கை எகிப்தின்பேரில் எண்ணியவிதம் படையெடுப்பாக முற்றுமானல், நாம் சண்டையில் இறங்கினதாக அறிவித்து நமது சைனியம் பிரிடிஷ் சைனியத்துடன் பக்கத்தில் சண்டை செய்யும் என்று கூறப்பட்டது.

இதற்குள், பிரிடிஷ் வெடிகுண்டு விமானங்கள் லிபியாவிற்குள் வெகுதூரம் பிரவேசித்து, அம்ஸீட், டார்ரு, பார்டியா, ஸித்திஓமார், மற்றும் ஊர்களைத் தகர்த்து வருகிருர்கள். ஆகவே சண்டைத் துவக்கம் வேகமாக இதாலியர்கள் கையிலிருந்து நேசநாடுகள் பக்கம் மாறிக்கொண்டுவருகிறது. இதாலி நீராவி உருளைபோல் எகிப்திற்குள் பிரவேசித்து விடலாமென்று மார்தட்டினர்கள். இப்பொழுது உருளையிருக்குமிடமும் தெரியவில்லை. நீராவியும் கற்ருேடுபோய் விட்டாற்போல் தோற்றுகிறது. என்னே ரோமாபுரி ரேடியோவின் வாக்கு! இருந்தாலும், ஆங்கில-எகிப்து சௌடான் (Sudan) மூலம் எதிர்க்கும் வழியிருப்பது. உண்மை; அபிஸினியாவில் தனக்கிருக்கும் ஆரம்ப சௌகூரியத்தை வைத்து இதாலி, பிரிடிஷ் சோமாலிலாண்டை பிடித்து கார்ட்டும் (Khartoum)வரை செல்லும் உத்தேசத்துடன் இந்த இடத்தில் சில பாகங்களைப் பிடிக்கச் செய்தார்கள். ஆனல் தனக்கு ஏற்பட்ட ஆரம்ப ஜெயத்தைச் சரியான படி உபயோகப்படுத்த முடியவில்லை என்று அறியப்படுகிறது. சமீபத்தில், பிரிடிஷ் இந்திய சைனியங்கள் மேடேமா (Metemma) முதலிய இடங்களைப் பிடித்து விட்டதுடன், கால்லாபட்டு (Gallabat)க்கு கிழக்கேயும், கஸ்ஸாலா (Kassala) பக்கத்தில் இதாலிய ராணுவங்களைத் தொந்திரவு செய்துவருகின்றன. இதன் மத்தியில், பழக்கப்படாத அபிஸீனியர்கள் இதாலியின் முதன்மையான அபஜெயத்தையே எதிர்பார்த்துக் கலகம் செய்யத் தயாராக இருக்கிருர்கள். மாஜி சக்கிரவர்த்தி ஸீலாஸி என்பவர் இன்னமும் மிகுந்த செல்வாக்குடையவராக யிருப்பதால், சுருசுருப்பான கலகத்தை கிளப்பிக்கொண்டிருக்கிருர். காலநிலை கொஞ்சம் திரும்பினல், இதாலியின் கிழ் ஆப்பிரிகா தனிப்படுவதுடன், இதாலியின் நிலமையும் கெடுதலாகிவிடும்.

ஆகாயம்.

ஆனல், மற்றும் ஒருவழி இருக்கிறது, இது ஆகாயம்; மற்ற ராஜ்ஜியங்களைப் போல் வாதமுறையில் எகிப்து ஆகாய எதிர்ப்புக்கு உட்பட்டதாகும்—கெயிரோவையே தாக்கக்கூடும். இதை விருத்திசெய்தால் ஸுயஸ் கால்வாய் பூராவும் கஷ்டப்படநேரிடும். ஏனென்ருல் கெயிரோவிலிருந்து தான் ஸுயஸ்,இஸ்மேலியா, போர்ட்ஸெட் முதலிய ஊர்களுக்கு சுத்த தண்ணீர் கொடுபட்டுவருகிறது. இந்த பயத்தை நிவர்த்திசெய்யவே நாம் எகிப்தில் ஒரு பெரிய சாம்ராஜ்ஜிய பொது சைன்யத்தை வைத்திருக்கிறேம். இந்த உயர்தர சேனை இந்தியா, ஆஸ்திரேலியா, நியுஸீலாண்டு, தென்ஆபிரிக்கா இவ்வூர்களிலிருந்து வந்த சைன்யங்கள்

அடங்கியதும் எந்த அவசரத்திற்கும் தகுந்தபடி உபயோகிக்கக்கூடிய மிகுந்த சாமார்த்தியமுள்ள விமானப்படையுடன் எதிரியைத்தாக்க ஆவலுடன் காத்துக் கொண்டிருக்கிறது. வாஸ்தவத்தில் "காத்துக்கொண்டிருக்கிறது" என்று சொல்லுவது சரியான வார்த்தையல்ல. ஏனென்றால், இந்த துருப்புகளும், ராஜாங்க விமானப்படைகளும், தென்ஆபிரிக்கா விமானப்படைகளும் சேர்ந்து தங்களுடைய துணிவுள்ள கொள்ளை வீழ்த்தலாலும், அதி உன்னத ஆராய்தலாலும் ஆபிரிக்காவின் எல்லா சண்டை மேடைகளிலும் தங்களின் மேன்மையை நிலை நிறுத்தியிருக்கிறார்கள். இதாலியின் தற்கால கேவல நிலைமையும், இதின் விமான படைகளுக்கு கிரீஸில் ருசுவான ஸாமர்த்தியக்குறைவும், மனதிற்கு உற்சாகத்தை உண்டாக்கக்கூடிய வேறு விஷயங்கள், எல்லாவற்றையும் ஒன்றுபடுத்தி பார்க்குங்கால் மத்திய கிழக்கில் பிரிடன், எகிப்து இவர்களின் விரோதிகளுக்கு சாதகமில்லையென்றே சொல்லலாம்.

இதாலியின் வீண் எண்ணங்கள்.

வடஆபிரிக்கா பூராவையும் தன்வசப்படுத்துவதே முஸோலினி (Mussolini) யின் கனவு. இங்கிலாந்தின்மேல் படையெடுக்க சுறுசுறுப்பாக இதாலிய சாம்ராஜ்ஜியம் ஒத்தாசை செய்வதின் கைமாறாக ஹிட்லரும் இதை கொடுப்பதாக வாக்களித்திருக்கலாம். ஆனால் படையெடுப்போ இதுவரை முடியாமற் போய் விட்டது; கனவு கனவாகவேயிருக்கிறது. அச்சுநாடுகள் ஸூயஸ் வாய்க்காலை சேருவதோ அல்லது தனிப்படாமல் இதாலியின் கிழ்ஆபிரிக்காவை காப்பாற்றுவதோ இப்பொழுது சந்தேகமேயாகும். எகிப்து, ஸூடான், கென்யா இவைகளில் பிரிடிஷ் நிலமை நாளுக்குநாள் மிகவும் வலுத்து வளர்ந்துவர, இதாலி தன் பூர்வஸ்திதிக்கு ஹானி வராமல் காப்பாற்றிக்கொள்வதே அதிக சிரமமாக ஆகி விட்டது. சென்ற சில நாட்களுக்குள் சேனாதிபதி வேவல் கிழ் பிரிடிஷ் சேனை லிபியாவில் இதாலியின் சைன்னியத்தின் வலது பக்கத்தில் தாக்கி, சோலத்திலிருந்து ஸிடிபராணியை அநேகமாய் தனிக்கும்படி செய்துவிட்டார்.

[இது எழுதியதற்குப் பிறகு ஸிடி பராணியில் பிரிடிஷாருக்குக் கிடைத்த மகத்தான வெற்றியைப்பற்றியும் முன்னேறிய இதாலியப் படையில் அநேகம் பேர்கள் கைது செய்யப்பட்டார்களென்றும் தகவல் கிடைத்திருக்கிறது.]

சாதாரணமாக ஜோஸியம் ஒரு பயங்கரமான விளையாட்டு, அதிவேகமாய் மதிப்பும் எல்லைகளும் மாரிவரும் இந்த உலகத்தில், ராஜீய தீர்க்கதரிசியின் கிரியைகள் மிகவும் அபாயகரமானதே. ஆனால் உலக வல்லரசு நாடுகளுக்கு விரோதமாய் நடக்கச் செய்யும் இந்த யுத்தத்தில், எகிப்து மேன்மேலும் அதிகரித்த பாகத்தை ஏற்றுக்கொள்ள நேரிடுமென்று கூறும் ஜோஸியம் கொஞ்சமும் அபாயகரமல்லதல்ல; எகிப்து மேலும் ஒரு கீர்த்தியை அடைவதுடன் தன் மேலான சரித்திரத்தில் ஒரு மகிமையுள்ள புதிய பக்கத்தைச் சேர்க்கச் செய்யும். இந்த யுத்தம் துவக்கிய காலமுதல் இத்தருணத்தைப்போல் ஒரு காலத்திலும் வட ஆபிரிக்காவில் நேயநாடுகளின் நிலைமை இவ்வளவு பிரகாசமாய் இருந்ததில்லை. ஒவ்வொருநாளும் மேற்கொண்டு சந்தோஷ சமாசாரங்களும்

நமது பலத்தில் ஒரு நம்பிக்கையும், முடிவில் ஜயம் நிச்சயமென்ற வாக்குறுதியும் வந்துகொண்டிருக்கிறது. எகிப்து நம்முடன் நிச்சய திட சிநேகிதராகயிருந்து வருகிறது. "எழுந்திரு, எகிப்து தேசத்தை சேர்" என்று 20 நூற்றாண்டுகளுக்கு முன் பிறந்த தெய்வ வாக்கை இப்பொழுதும் நாம் மருமுறை நம்பிக்கையுடன் பின்பற்றுவோமாக.

வார யுத்தச் செய்திகள்.

(4—12—40 லிருந்து 11—12—40 வரை).

கிரீஸ்.

பிரமேடி, ஆர்கைரோகாஸ்ட்ரோ, ஸான்டிக்வாரன்டோ, டெல்விநோ என்ற நான்கு இடங்களை ஒரு வாரத்துக்குள் ஒன்றன்பின் ஒன்றாகப் பிடித்து விட்டு வீரம் பொருந்திய கிரேக்க சைன்யம் கிமவா, பீராட், எல்பாஸன் நகரங்களை நாடி முன்னேறிக்கொண்டிருக்கிறது. பனிமழை பெய்கிறது; இதற்கும் அஞ்சவில்லை. உணவு முதலிய சாமான்கள் பின்னே தொடர்ச்சியாய் வர ஏற்பாடு செய்துகொண்டு வெகு ஜாக்கிரதையாய், மெள்ள, மெள்ள சைன்யம் முன்னேறுகிறது. எதிரியானவன் உபசைன்யங்களைக்கொண்டு திடீரென்று திருப்பி எதிர்க்காதபடியும் பார்த்துக்கொள்ளுகிறது. ஆர்கைரோவைப் பிடித்ததை கிரேக்கர்கள் கோரிட்ஸா வெற்றிக்குச் சமானமாகக் கருதுகிறார்கள். ஈஸ்டர் பண்டிகையில் ஒருவருக்கொருவர் முத்தங் கொடுத்து வாத்ஸல்யத்தைக் காண்பிப்பதுபோல இப்பொழுது குதூகலப்படுகிறார்கள்.

இதாலிக்கு அவமானம் அளவுக்கு மிஞ்சி வந்து விட்டது. ஆர்கைரோகாஸ்ட்ரோ பிடிபட்டதிலிருந்து இதாலி, ஆல்பேனியாவில் தனக்குள்ள நாலில் ஒரு பங்கு ஜனங்களையும், ஏழிலொரு பங்கு பூமியையும் இழந்து விட்டது. வலோனா, டுராஸோத் துறைமுகங்களும் போய்விடும் போலிருக்கிறது. 'யமன் பட்டாளம்' என்ற இதாலிய பட்டாளம் யமனுக்கே இரையாய் விட்டது. பேர்போன 'கறுப்புச் சட்டையர்' என்ற பட்டாளத்தில் அநேகர் மறித்துப் போய் அவர்கள் எலும்புகள் அல்பேனியாவில் கிடந்து உலருகின்றன. நிலச் சண்டையிலும், கடற்சண்டையிலும் தோற்றுப் போனதற்காகச் சேனாபதிகளை அவமானப் படுத்தி வேலையிலிருந்து நீக்கிவிட்டார்கள். அவர்களில் சிலரும், அதிகாரத்திலிருக்கும் பாஸிஸ்ட் கக்ஷியை வெறுத்து வேலையிலிருந்து விலகிக் கொள்ளுகிறார்கள். சேனைத் தலைவரான மார்ஷல் படோக்ளியோ ராஜீநாமாச் செய்து விட்டார். கடற்படைத் தலைவரான அட்மிரல் கவாக்நாரியும், டாடிகானீஸ் தீவுகளுக்கு கவர்னரான ஜென்ரல் மரியா டி வெசியும், அவர்கள் கேட்டுக்கொண்டபடி வேலையிலிருந்து விலக்கப் பட்டிருக்கிறார்கள். வேறிரண்டு பெரிய கடற்படைத் தலைவர்கள் வேலையிலிருந்து தள்ளப்பட்டார்கள். கடற்படைத்தலைவர்களை வேலை நிறுத்தம் செய்ததிலிருந்து இதாலியர்கள் கடலில் வெற்றியடைந்ததாகச் சொல்லிக்கொண்டதெல்லாம் பொய்யென்று வெளியாகிறது. பாஸிஸ்ட் கக்ஷியைத் திருப்தி செய்வதற்காக படோக்ளியோவை வேலையிலிருந்து தள்ளியிருக்கலாம். ஆனால் சமயம் வந்தால், படோக்ளியோ பாஸிஸ்ட் கக்ஷிக்கு எதிராகக் கிளம்பி முஸோலினி குடும்பத்தையே விரட்டி

விடுவாரென்றும் தோன்றுகிறது. அது எப்படியிருந்தபோதிலும் சரி, முஸோலினியின் பெயர் இப்பொழுது மழுங்கியிருப்பதுபோல் இதுவரையில் மழுங்கவில்லை, இதுதான் முஸோலினியைத் தாக்க நல்ல சமயம். டேயிலி ஹெரல்டு சொல்லுவதுபோல முஸோலினி ஒரு கிழக் குற்றவாளி; மதிக்கும் காலம்போய் விட்டது. இப்பொழுது அவனை மேலுக்குமேல் எதிர்க்கவேண்டும். அவனுக்குக் கொடுக்கும் ஒவ்வொரு அடியையும் கேட்டு உலக முழுதும் மெச்சும்; மகிழும். அம்மாதிரி எதிர்ப்பும் ஆரம்பமாய் விட்டது: எகிப்திலிருக்கும் பிரிடிஷ் சைன்யம் மேற்குப் பாலைவனத்தில் முன்னேறி ஸிடி-எல்-பரானியைப் பிடித்துக் கொண்டுவிட்டது.

ஆகாய எதிர்ப்புகள்.

யுத்தம் துவக்கிய இந்த 18 மாதங்களில் ஜெர்மனி 6,000 விமானங்களையும், 18,000 விமானிகளையும் இழந்து விட்டது. இதாலி 327 விமானங்களை இழந்தது; இவைகளில் 27 கிரீஸில் நஷ்டமாயின. சென்ற வாரத்தில் பிரிடிஷ் விமானங்கள் ஜெர்மன் நாடுகளுக்குச்சென்று 42 துறைமுகங்களையும், கப்பல்களையும் கப்பற் கட்டுந்துறைகளையும், 11 எண்ணெய் நிலயங்களையும், 14 தொழிற்சாலைகளையும், 24 ரயில் பாதைகளையும் தாக்கின. நடப்பு வாரத்தில் ஜெர்மனியில் கொலோனையும், ஹாம்பர்க்கையும், இதாலியில் ராயல் வெடிமருந்து கிட்டங்கியையும், பியாட் தொழிற்சாலையையும் தாக்கின. பிரிடனில் ஸௌதாம்ப்டனும், பிரிஸ்டலும் முக்கியமாய்த் தாக்கப்பட்டன. ஜெர்மானியர் அசுரத்தனமாய் எதிர்த்ததில் ஹோலிவுட் அரண்மனை, கிரீன்வீச் ஆப்ஸர்வேட்டரி (வான சோதன நிலயம்), ப்ளாக்பரையர்ஸ் குஸ்தி நிலயம், 'லார்ட்ஸ்' என்ற கிரிக்கெட் விளையாட்டு பூமி பழுதாயின.

கடல் யுத்தம்.

நவம்பர் 27-ல் இதாலியர்கள் தங்கள் கப்பற்படையின் பெரும் பாகத்தை டாரன்டோவிலிருந்து ஸார்டீனியாவிலிருக்கும் காக்லியாரி துறைமுகத்துக்குக் கொண்டு போனது தப்பானகாரியம். அதை எதிர்த்த பிரிடிஷ் கடற்படை அதை அழித்து விட்டதாகச்சொல்லவில்லை. இதாலியச்சண்டைக்கப்பல்களை டாரன்டோவிலிருந்து அப்புறப்படுத்தியதிலிருந்து எட்ரியாடிக்கடலின் காபந்து போய்விட்டது. பாரி, பிரிண்டிஸி துறைமுகங்களிலிருக்கும் சிறு கப்பல்கள் தான் இனி இங்கு காவல் கொடுக்கமுடியும். பிரிடிஷ் கப்பல்களும், கிரேக்க கப்பல்களும் நுழைய இடமேற்பட்டுவிட்டது.

டாரன்டோவிலிருந்த கப்பற்படை இது வரையில் கடல் மார்க்கமாக ஆபிரிக்காவிலிருக்கும் இதாலியப்படைகளுக்கு ஆகாராதிகளைக்கொண்டு போகக் கடல் வழியைக்காத்துக்கொண்டிருந்தன. இனி பிரிடிஷ் கப்பல்கள் உணவுக் கப்பல்களை வழிமறிக்கும்.

இதாலிய சண்டைக் கப்பல்கள் காக்லியோவுக்கு மாற்றப்பட்டதே பிரிடனுக்கு ஒரு பெரு வெற்றியாகும். நவம்பர் 27-ம் தேதி நடந்த சண்டையில் இதாலிக்கு அதிக நஷ்டமேற்படாவிட்டாலும், டாரன்டோவிலிருந்து வெளிப் படுத்தி வேறு இடத்தில் ஒளிந்துகொள்ளும்படி விரட்டியதே பிரிடனுக்கு ஒரு பெருவெற்றியாகும். ஆல்பேனியாவிலும், வட ஆபிரிக்காவிலும் சண்டை செய்ய அநுகூலமாயிருந்த டாரன்டோ நிலயம் இனி உபயோகப்படாது. அக்கரையிலிருக்கும் இதாலியத் துருப்புகளுக்குத் தளவாடங்களனுப்பும் கடல் வழி அடைபட்டுப் போகும்.

தெற்கு அட்லாண்டிக்கில் சிலகாலமாக, கிரேக்கியக் கப்பல் போலவும், பிரஸீல் கப்பல் போலவும், டச்சுக் கப்பல் போலவும் வேஷம் போட்டுக்கொண்டு ஜெர்மன் கப்பலொன்று மறைந்து திரிகிறது. இதை கார்னர்வன் காஸிலென்ற பிரிடிஷ் கப்பல் சுட்டு விரட்டிவிட்டது. இந்தச் சண்டையில் ஏற்பட்ட சிற்சில பழுதுகளைப் பார்த்துக்கொண்டு பிரிடிஷ் கப்பல் மான்டிவிடியோ துறைமுகத்தை விட்டுக் கிளம்பிவிட்டது.

சில தினங்களுக்கு முன்னல் டாம்பிகோ துறைமுகத்திலிருந்து ஓடப்பார்த்த 3 ஜெர்மன் கப்பல்களில் ஒன்ருகிய இடர்வால்ட், பிரிடிஷ் கப்பலாகிய டயமீட் அணுகிவர, தானே தன்னைக் கவிழ்த்துக்கொள்ளப்பார்த்தது, தீப்பிடித்தது. ஆனல் இப்பொழுது டயமீட் கைவசம் அகப்பட்டுக்கொண்டது.

அமெரிக்கா.

பிரிடிஷ் கஜானு மூன்ரும் காரியதரிசி ஸர் பிரடரிக் பிலிப்ஸ் எடுத்துக் காட்டியிருக்கிறபடி பிரிடனுடைய செல்வ நிலை இதுவரையில் இவ்வளவு திருப்திகரமாயிருந்ததில்லை. அமெரிக்காவிற்கும் சாமான்களுக்கு இதுவரையில் முன்னுலேயே ரொக்கம் கொடுத்து வாங்கப்படுகிறது. பிரிடன் ரொக்கம் கொடுத்து வாங்கமுடிந்ததற்குச் சரியாக போதுமான அளவு அமெரிக்காவில் சாமான்கள் உற்பத்தி செய்யமுடியவில்லை. நேராகவோ, பிறரைக்கொண்டோ இதுவரையில் பிரிடனும் அமெரிக்காவைக் கடன் கேழ்க்கவில்லை. ஆனல் எதிர் காலத்தில் கடன் கொடுப்பதைப் பற்றி அமெரிக்க அதிகாரிகளைக்கொண்டு நிதானிக்கிறது. அமெரிக்க வியாபார இலாகா காரியதரிசியாகிய ஜோன்ஸ் என்பவர் நிர்ப்பயமாய் பிரிடனுக்குக் கடன் கொடுக்கலாமென்று சொல்லிவிட்டார். முடிந்தவரையில் பிரிடன் ரொக்க வியாபாரம் செய்து கொண்டு பிறகு வேண்டு மானல் வேண்டிய அளவு கொடுக்கலாமென்று தீர்மானிப்பார்கள்போலிருக்கிறது. அமெரிக்கா ஹாலண்டுக்குக் கடன் கொடுத்து அதை ஹாலண்ட் பிரிடனுக்குக் கடனகக் கொடுக்கலாமாவென்றும் யோசனை செய்யப்படுகிறது. இப்படிச் செய்தால் ஏற்கனவேயுள்ள ஜான்ஸன் ஆக்டுக்கும், நியூட்ராலிடி (நடுநிலைமை)ச் சட்டங்களுக்கும் விரோதமேற்படாது.

பிரிடனுனது இப்பொழுது யுத்தத்திற்காக 13,000,000 பவுன் தினசரி செலவு செய்கிறது. இதில் பெரும்பாகம் சாமான்கள் வாங்க அமெரிக்காவுக்குப்போகிறது. ஏற்கனவே 2,500,000,000 டாலர் பெறுமான சாமான்களுக்கு ஆர்டர் கொடுக்கப் பட்டிருக்கிறது. அமெரிக்காவுக்கு ஸப்ளை செய்ய முடிந்தால் மேலும் 1,500,000,000 டாலர் பெறுமான சாமான்கள் சப்ளை செய்ய ஆர்டர் கொடுக்கப் படும். ஆனுல் அமெரிக்காவுக்கு அதிகச் சாமான்கள்—அதாவது, கப்பல்களும், விமானங்களும் செய்யமுடியாது திணறுகிறது. யுனைடட்-ஸ்டேட்ஸ் ஏற்றுமதியில் 100-க்கு 60-பாகம் இப்பொழுது பிரிடன் வாங்கிக்கொள்ளுகிறது. இதற் கேதாவது தடையேற்பட்டால் யுனைடட்-ஸ்டேட்ஸ் வியாபாரமும் கைத் தொழிலும் படுத்துவிடும்.

ப்ரடரிக்ஸன் சுரங்கக் கம்பெனிச்சாலையில் 5 நாட்களுக்குள் இரண்டாம் முறை வெடி விபத்து ஏற்பட்டுவிட்டது. பக்கத்திலிருக்கும் டகோமா என்ற ஊரே ஆடிவிட்டது. அமெரிக்காவிலுள்ள யுத்த-தளவாட-உற்பத்திச்சாலைகள், ரஸாயன, பெட்ரோல் சாலைகள் வெடி விபத்திலகப்பட்டுக்கொண்டது இது வரையில் 28 ஆகும்.

பிரான்ஸ்.

20-லக்ஷம் பிரெஞ்சு சிப்பாய்கள் ஜெர்மனியில் சிறைபட்டிருக்கிறுர்கள். இவர்களை மீட்க பிடேன் தன் தலைநகரை வெர்ஸேலுக்கு மாற்றிக்கொள்ளச் சம்மதித்திருக்கிறுர். சீக்கிரத்தில் அங்கு போய்விடலாம். ஆனுல் அங்கு இவரே ஒரு கைதிபோல்ஆகி முன்னேற்றக்கக்ஷிகளோடு நெருங்கிப் புழங்கமுடியாமல் போய்விடும். ஜென்ரல்-வெய்காண்டை இவர், இம்மாதிரிக் கஷ்டத்துக் குட்படாது மோராக்கோவுக்கு அனுப்பிவிட்டது நல்லகாரியம்தான். இவர் வெளியேறியதிலிருந்து, பிரான்ஸுக்கு ஜெர்மானியர் முன்தாப்பாள் போட்டிருந் தாலும், பின் கதவைத்திறந்துகொண்டு வெளியேற வழியேற்பட்டு விட்டது. பிரான்ஸுக்குச் சொந்தமான வட-ஆபிரிக்க நாடுகள் ப்ராதி-ஸ்வதந்திரத் தோடிருக்கின்றன. இவைகளின் பலத்தைக்கொண்டு, வேண்டிய காலங்களில் சௌகரியங்கள் செய்துகொள்ளலாம்.

கொஞ்ச காலமாக, ஜெர்மனியிலும், பிடேனிடத்திலும் லவாலுக்குச் செல்வாக்குக் குறைவதாகத் தெரிகிறது. இவர் பெர்லின் பிரயாணம் ரத்து செய்யப்பட்டுவிட்டது.

ருமேனியா.

பொருளாதார நிலைமையைச் சீர்திருத்திக்கொள்ள ருமேனியா ஜெர்மனியோடு 10-வருஷ உடன்படிக்கையொன்றை டிசம்பர் 4-ல், செய்துகொண்டது. இதன்படி விவசாயம், ரெயில்-பாதைகள், ரஸ்தாக்கள், எண்ணெய்க் குழாய்கள் அதிகப் படுத்தப்படும். எண்ணெய் நிலயங்களும், குழாய்களும் இனி சர்க்காருக்குச் சொந்தமாகும். யூதர்களுக்குச் சொந்தமான கப்பல்களைச் சர்க்கார் எடுத்துக் கொள்வார்கள்.

ஜார்காவையும், மாட்கியாருவையும் கொன்றவர்கள் மரண தண்டனைக்குள்ளானார்கள். ஐரன்-கார்ட் கக்ஷி நிராயுதபாணியாக்கப்பட்டுவருகிறது. ஆனால் அதன் பாதுக்காப்புக்காக ஏற்பட்ட அந்தரங்கபாகம் மட்டும் கலைக்கப்படாது.

ப்ரஹோவா பிரதேசத்திலுள்ள எண்ணெய்க்கிணறுகளில் தீப்பிடித்துக் கொண்டது. அங்கிருக்கும் வேலைக்காரர்களும் அதிகாரிகளும் கைதுசெய்யபட்டிருக்கிறார்கள்.

ஸ்பெயின்.

டிஸம்பர் 2-ல் பிரிடனுக்கும் ஸ்பெயினுக்கும் உடன்படிக்கை ஏற்பட்டு ஸ்பெயினுக்கு பிரிடனிலிருக்கும் முதலுக்குத்தக்கபடி பவுன் கொடுத்துதவ ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதிலிருந்து நடு நிலை நாடுகளின் சௌகரியத்தை பிரிடன் கவனிப்பது வெளிப்படும். பிரிடன் போட்டிருக்கும் முற்றுகையால் எதிரிகளுக்குப் பாதகமே ஒழியே நடு-நிலைநாடுகளுக்குக்கூடிய வரை அனுகூலங்களைச் செய்ய பிரிடன் முயற்சிக்கிறது.

ப்ராங்கோ ஒரு தொழிலாளிகள் சட்டம் ஏற்படுத்தியிருக்கிறார். அதன்படி ராஜ்யத்திலுள்ள எல்லோரும் வேலைக்காரர்களடங்கிய ஒரு ராணுவமாகத் தயாரிக்கப்படுவார்கள். பாஸி-நாஸிகள் தோரணையில் ஒரு வாலிப ராணுவம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

துருக்கி.

பூகோள அமைப்பினாலும் ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் பொருளாதார சம்பந்தங்களாலும் துருக்கியின் வியாபார சாமான்கள் நூற்றுக்கு அறுபது ஜர்மனிக்கும் நூற்றில் ஒன்று பிரிட்டனுக்கும் போய்க்கொண்டிருக்கிறது. இந்தத்தாரதம்யத்தைச் சரிக்கட்ட துருக்கிக்கும் பிரிடிஷ் சாம்ராஜ்யத்திற்கும் வியாபாரத்தை விருத்திசெய்ய ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

கீழ் தூர தேசங்கள்.

1. **ஜப்பான்.**—சமீபத்தில் அயல் நாட்டுப் பத்திராதிபர்களைக்கண்டு ஜப்பான் அயல்நாட்டு மந்திரி மத்ஸுவோகாபேசியதில் மூவரசு உடன்படிக்கை சமாதான உடன்படிக்கை என்றும் ஐரோப்பிய சீன யுத்தங்களில் இதரர்கள் சேராமல் தடுப்பதற்கு ஏற்பட்டதாகவும்; ஜப்பானும், அமெரிக்காவும் யுத்தம் செய்து கொள்வது மூடத்தனமென்றும்; சுங்கிங்குக்கு அமெரிக்காக் கொடுக்கும் பொருளுதவியால் சீன யுத்தம் நீடிக்குமென்றும்; நான்கிங்கோடு செய்து கொண்ட உடன்படிக்கையால் ரஷியாவின் நட்புக்குறையாதென்றும் எடுத்துக்காட்டினர்.

சீனர்கள் சின்னன்குவானைப்பிடித்துக்கொண்டு வட ஹுயபாவில் சண்டை செய்த ஜப்பானியரைத் தடுத்து விட்டதாகச் செய்திகிடைத்திருக்கிறது.

2. **தாய் லாண்ட்.**—தாகட் என்ற எல்லை ஊரில் தாய்லாண்ட் விமானங்களுக்கும் பிரெஞ்சு இந்து சைன விமானங்களுக்கும் 20 நிமிஷம் சண்டை நடந்தது. தாய்லாந்துக்குள் பிரவேசிக்க பிரஞ்சுக்காரர்கள் செய்த பிரயத்தினங்கள் பலிக்கவில்லை.

பிரிடன்.

சக்கிரவர்த்தி பார்லிமெண்டில் செய்த பிரஸங்கத்துக்குச் சபையானது மறுமொழி சமர்ப்பித்தபோது தொழிற்கக்ஷி அங்கத்தினர் ஒருவர் சமாதானப்பேச்சை எடுத்தார். சண்டையை நிறுத்தக்கூடாதென்று 341 பேர்களும், நிறுத்தலாமென்று 4 பேர்களும், வோட்டுக்கொடுத்தார்கள். "ஹிட்லர் பொய்சொல்லுகிறவர், போக்கிரி, அவர் வார்த்தையை நம்பக்கூடாது. கடைசிவரையில் சண்டைபோட்டுத்தான் தீரவேண்டும்" என்று கன்ஸர்வேடிவ் மெம்பர் ஒருவர் சொன்னதே சபையின் முழு நோக்கமாகும்.

போலண்ட் மாதர்களின் புலம்பல்.

வார்ஸாவிலிருக்கும் மாதர்கள் அமெரிக்க மாதர்களுக்குப் பின்வருமாறு புலம்பிக் கடிதமெழுதியிருக்கிறார்கள் :—

"ஜெர்மானியர்கள் எங்கள் ஜாதியையே அழித்துவிடப்பார்க்கிறார்கள். ஏற்கனவே 3,000,000 பேர்களைக்கொன்றாய் விட்டது. பஞ்சத்தால் மேல் மேலும் இறந்து கொண்டிருக்கிறார்கள். எங்கள் நிலைமை நரகவாசமாயிருக்கிறது. எங்கள் கணவர்களும், சகோதரர்களும், பெற்றவர்களும் ஆயிரக்கணக்காய்க் கொல்லப்பட்டுவிட்டார்கள். இன்னும் பலர்கள் பஞ்சத்தாலும், குளிராலும், ஜெயில் வாஸத்தாலும் மடிகிறார்கள்.

12—14 வயதுள்ள எங்கள் பிள்ளைகளைக்கொன்று விட்டார்கள். பாக்கியிருப்பவர்களை ஜெர்மனிக்குக்கூலிவேலைக்குக் கொண்டுபோய் விடுகிறார்கள். இவர்கள் திரும்பி வரப்போவதில்லை.

எங்கள் அருமைப்பெண்களைத் தெருக்களில் போகும்போது கைதுசெய்து, இராக்காலங்களில் வெளிப்படுத்தி ஜெர்மனியில் தாஸி—நிலையங்களுக்குக் கூட்டிக் கொண்டு போகிறார்கள்.

பிரிடனுக்கு ஊழியம் செய்யாது விடுவித்ததற்காக, போல்மக்கள் ஜெர்மனிக்கு நன்றிசெலுத்தி, சுகமாய் வாழ்வதாக, போலண்டிலிருக்கும் ஜெர்மன் அதிகாரி நடுநிலைநாட்டுப்பத்திராதிபர்களுக்குச்சொல்லுகிறார். இதெல்லாம் முழுப் பொய். உலகமிதை நம்பிவிடக்கூடாது.

நாங்களிப்பொழுது நரகத்திலகப்பட்டுக்கொண்டு முழிக்கிறோம். விடுதலையைக்காணோம்.

ஆனால் நம்பிக்கையை விட்டுவிடவில்லை. நேயக்கக்ஷியார் வெற்றிபெற்று எங்களை மீட்டிவிடுவார்களென்று நம்புகிறோம். ஆனால் இதிலேதாவது தாமதம் ஏற்பட்டால், பிறகு போல்ண்டென்ற பூமி இருக்குமேயொழிய, போலண்ட் மக்கள் அடியோடு அழிந்துவிடுவார்கள்.

தேதி.	பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
1—12—40 (ஞாயிற்றுக்கிழமை).			
	ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.		
	பகலில்.—கப்பற்படை நிறுத்துமிடங்கள், ஸப்மரைன் (Sub-maraine) நிலயம்—லோரியான் (Lorient.)	......	பலத்த சேதம்.
	மின்சார உற்பத்தி ஆலை, சிறிய துறைமுகம், கப்பல்களைப் பழுதுபார்க்க நிறுத்தும் இடங்கள்.—ப்ரெஸ்டு (Brest.)	......	தீப்பிடித்தது.
	சைன்யங்கள் வசிக்கும் கட்டடங்கள், சாமான் கிட்டங்கிகள், எஸ்னேஜர்கி (Esnejerg) காஸ் (Gas) உற்பத்தி ஆலை.—நார்வே (Norway)யிலுள்ள கிறிஸ்டியன் ஸண்ட் (Christian Sund.)	...... நஷ்டமில்லை.	பல இடங்களில் தீப் பிடித்தது. வெடிகளும் கிளம்பின.
	இரவில்.—கடற்படை கட்டுமிடங்கள்.—வில்ஹெல்ம்ஷாவன் (Wilhelmshaven.)		
	இதாலிய ஆபிரிக்கா (Africa).		
	தரையில் இருக்கும் இதாலிய விமானங்கள்.—ஸிடிபரானி (Sidi Barrani).	......	2விமானங்கள் நாசம்; 2 விமானங்கள் சேதம்; மற்றும் பல விமானங்களுக்கு சொற்ப சேதம்.
	விரோதி சைன்யங்கள், மோட்டார்கள்.—மெடெம்மா (Metemma), கொண்டார் (Gondar) ரோடு.	......	பலருக்குக் காயம். பல மோட்டார் லாரிகளுக்குச் சேதம்.
	விரோதி சைன்யங்கள் தங்குமிடம்.—வாடி அராடிபா (Wai Aradiba), மெடெம்மா (Metemma), குப்பா (Gubba), டாகெலா (Daugela).	...... நஷ்டமில்லை.	சைன்யங்கள் வசிக்குமிடம் தகர்க்கப்பட்டது. பல இடங்களில் தீப்பிடித்தது.
	அல்பேனியா (Albania).		
	ஒரு ரோடு.—தென்மேற்கு அல்பேனியா (Albania).	......	ஒரு முக்கியமான பாலம் உடைக்கப்பட்டது.
	ராணுவ பாலங்கள்.—டெபெலீனி (Tepeleni).	நஷ்டமில்லை.	......

தேதி.	பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
2—12—40. (திங்கட்கிழமை).			
	ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.		
	ஒரு கப்பல்—பெஜி (Feje) தீவு ...	......	தீப்பிடித்தது.
	மற்றொரு கப்பல்—நார்வே (Norway) கடற்கரை.	......	மூழ்கடிக்கப்பட்டது.
	ஸப்மரைன் (Submarine) நிலயம்— லோரியான் (Lorient).	நஷ்டமில்லை.	......
	இதாலி (Italy).		
	எண்ணெய் சுத்தி செய்யுமிடங்கள், முக்கியமான ரயில்பாதை—நேபிள்ஸ்.	......	எங்கும் தீப்பிடித்தது. தரையில் இருந்த பல விமானங்கள் தீக்கிரையாகின.
	2 விமான நிலயங்கள்—ஸிஸிலி (Sicily) அதில் ஒன்று அகஸ்டா (Augusta)-வில்.	......	தீயும், வெடிகளும் கிளம்பின.
	இதாலிய ஆபிரிக்கா (Africa).		
	மோட்டார் வண்டிகள், அவைகளை ஓட்டுகிற இதாலியர்கள்—ஆதி உர்கிக்கோட்டை (Adi Urgi Fort).	......	பல சேதமாயின.
	ஸூலா (Zula).		
	வேவு பார்த்தல்—விரோதி நாடுகள் ...	நஷ்டமில்லை.	முக்கியமான விவரங்கள் கிடைத்தன
	அல்பேனியா (Albania).		
	விரோதி சைன்யங்கள், சாமான் கிட்டங்கிகள்—இதாலிய சைன்யத்துக்குப் பின்னால்.		
	சிறிய துறைமுகம், கப்பல்கள்—வலோனா (Valona).	......	பலத்த சேதம். ஒரு கப்பல் சேதம். 1 விமானம்.
	இதாலிய விமானங்கள்—ஆர்கைரோகாஸ்ட்ரோ (Argyrokastro) பிரதேசம்.	நஷ்டமில்லை.	4 விமானங்கள்.

தேதி. பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
3—12—40. (செவ்வாய்க்கிழமை).		
ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.		
பகலில்.—விமான நிலயங்கள்—ஜெர்மனி ஆக்கிரமித்துக்கொண்டிருக்கும் வட பிரான்ஸ் (France).	1 விமானம்.	......
இரவில்.—மான்ஹீம் (Mannheim), லட்விக்ஷாபன் (Ludwigshafen).	... ..	தீயும், வெடிகளும் கிளம்பின.
உலை—எஸ்ஸன் (Essen).	......	......
படையெடுக்க உபயோகப்படும் துறை முகம்—டன்கர்க் (Dunkirk).	......	......
அல்பேனியா (Albania).		
பின்னடையும் இதாலிய சைன்யங்கள்—அல்பேனியா (Albania).	......	பலருக்குக் காயம்.
4—12—40 (புதன்கிழமை).		
ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.		
மானீஸ்மான் ரோரன் வேக் (Mannesmann, Rohrenweke) யுத்த தளவாட உற்பத்திசாலை, டேர்ன்டார்ப் (Derndorf) ஜில்லாவிலுள்ள ரயில் வண்டிகள் நிறுத்துமிடங்கள்.	... ...	வெடிகளும், பல இடங்களில் தீக்களும் கிளம்பின.
கப்பல் நிறுத்துமிடங்கள்—ரைன் (Rhine) நதி நெடுக இருபக்கத்திலுமுள்ளவைகள்.		
நிலக்கரி, காஸ் (Gas) ஆலைகள்—டஸ்ஸல்டார்ப் (Dusseldorf).	......	தீப்பிடித்தது.
துறைமுகங்கள்— ஆண்ட்வர்ப் (Antwerp), கலே (Calais).		
விரோதி விமான நிலயங்கள், வெகு தூரம் தெரியக்கூடிய எலெக்டிரிக் விளக்குகள், விமானத்சுடும் பீரங்கிகள் வைக்கப் பட்டிருக்கும் இடங்கள்.	......	பலத்த சேதம்.

தேதி.	பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
4—12—40. (புதன்கிழமை)—தொடர்ச்சி.			

இதாலி (Italy).

ராயல் ஆர்ஸினல் (Royal Arsenal)—டூரின் (Turin).		தகர்க்கப்பட்டது.
பியட் (Fiat) தொழிற்சாலை—டூரின் (Turin).	1 விமானம்.	சேதமாயிற்று.

இதாலிய ஆபிரிக்கா (Africa).

சாமான் கிடங்குகள்—செல்கா (Chelga)-விற்குக் கிழக்கே ரோட்டில்.	......	தீக்கிறையாகின.
ரயில்வே ஸ்டேஷன்.—அடார்தி (Adarti), எல் ஆடம் (El Adem), ஸோலம் (Sollum), ஸிடி பரானி (Sidi Barrani).	1 விமானம்.	பலத்த சேதம்.

அல்பேனியா (Albania.)

விமானச்சண்டை.—விரோதி சைன்யங்களின் தலைக்குமேல்.	நஷ்டமில்லை.	10-விமானங்கள்.
விரோதி சைன்யங்கள்.—டெபெலீனி (Tepeleni), கெல்ஸைரி (Kelcyre) பிரதேசம்.		
விரோதி நாசகாரி.—ஸாண்டி கொராண்டோ (Santi Quaranto) துறைமுகம்.	......	பழுதாக்கப்பட்டது.

5—12—40 (வியாழக்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

எலெக்ட்ரோ (Electro), கெமிகல் (Chemical), தொழிற்சாலை.—இண்ட்ஹோவன் (Eindhoven).	......	சேதமாயிற்று.
விமான நிலயங்கள்.—ராட்டர்டாம் (Rotterdam), ஹாம் (Hamm).	......	......
ஸப்மரைன் (Submarine) நிலயம்.—லோரியான் (Lorient).	2 விமானங்கள்.	தகர்க்கப்பட்டது

தேதி.	பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
5—12—40.	(வியாழக்கிழமை)—தொடர்ச்சி.		
	இதாலிய ஆபிரிக்கா (Africa).		
	மோட்டார் வண்டிகள்—*கஸாலா* (Kassala)-*வுக்கு வடக்கே.*	......	*பலத்த சேதம்.*
	வேவு பார்த்தல்.—*விரோதியின் நாடுகள்.*		
	அல்பேனியா (Albania).		
	பின்னடையும் இதாலிய சைன்யங்கள்.		
6—12—40.	(வெள்ளிக்கிழமை).		
	ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.		
	விமான நிலயங்கள்.—*ஆர்லியன்ஸ்* (Orleans) *சமவெளியிலிருந்து 2 விமானங்கள். ஹாலந்து* (Holland) *வரையில்.*		*பிரிடிஷ் விமானப் படை போகுமிடமெல்லாம் ஒரே தீமயம்.*
	கப்பற் நிறுத்துமிடங்கள்.—*கலே* (Calais), *டன்கர்க்* (Dunkirk), *புலாயின்* (Boulogne).	......	*பலத்த சேதம்.*
	அல்பேனியா (Albania).		
	முன்னேறும் கிரேக்கத்துருப்புகளுக்கு ஆகாரம்.—*அல்பேனியா* (Albania).	......	......
	ராணுவ கட்டடங்கள், மோட்டார்வண்டி நிறுத்துமிடம், வெடிமருந்துக்கிடங்கு.—*வலோனா* (Valona).	......	*புகையும், தீயும் கிளம்பின.*
7—12—40	(சனிக்கிழமை).		
	ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.		
	தொழிற் சாலைகள்.—*டஸ்ஸல்டார்ப்* (Dusseldorf) *பிரதேசம்.*	......	*பலத்த சேதம்.*
	துறைமுகங்கள்.—*ஆண்ட்வர்ப்* (Antwerp), *டன்கர்க்* (Dunkirk), *கலே* (Calais), *புலாயின்* (Boulogne).	......	......

தேதி. பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
7—12—40. (சனிக்கிழமை)—தொடர்ச்சி.		
பல விமான நிலயங்கள்.—ஜெர்மனி ஆக்கிரமிப்பிலிருக்கும் ஹாலந்து (Holland), பெல்ஜியம் (Belgium), பிரான்ஸ் (France).		...... சேதமாயின.
கப்பற் கட்டுமிடங்கள், நிறுத்துமிடங்கள்.—லோரியான் (Lorient), ப்ரெஸ்ட் (Brest).	4 விமானங்கள்.	தீயும், வெடிகளும் கிளம்பின.
ராணுவ தளவாட உற்பத்திச்சாலை.—மான்ஹீம் (Mannheim).	......	......
இதாலிய ஆபிரிக்கா (Africa).		
விமான நிலயம், வெடிதுண்டு கிடங்கு, அரசாங்க காரியாலயங்கள்.—காஸ்டெல் பெனிடோ (Castel Benito).	......	தீப்பிடித்தது.
மோட்டார் வண்டிகள்—அஸாப் (Assab).		
அல்பேனியா (Albania).		
கப்பல்கள்.—அல்பேனிய (Albanian) கடற்கரை.	......	......
பின்னடையும் இதாலியர்கள்.—அல்பேனியா (Albania) முழுவதும்.	......	
8—12—40. (ஞாயிற்றுக்கிழமை).		
ஜேர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.		
உலைகள், ரயில்வே கப்பல் சாமான்கள் செய்யப்படும் எஃகுத் தொழிற்சாலைகள், மற்றும் யுத்தத்திற்குத் தேவையான சாமான்கள்.—டஸ்ஸல்டார்ப் (Dusseldorf).	......	பலத்த சேதம் பல இடங்களில் தீப்பிடித்தது.
ஸப்மரைன் (Submarine) நிலயம்.—லோரியான் (Lorient).	......	தகர்க்கப்பட்டது.
துறைமுக இயந்திர சாதனங்கள், கப்பல்கள்.—ப்ரஸ்ட் (Brest), போர்டோ (Bordeaux).	......	சேதமாயின.

தேதி.	பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
8—12—40.	(ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி.		
	துறைமுகங்கள்.—ப்ளஷிங் (Flushing), டன்கர்க் (Dunkirk), க்ரேவ்லின்ஸ் (Gravelines).	......	பலத்த சேதம்.
	பல விரோதி விமான நிலயங்கள்.		
	இதாலிய, ஆபிரிக்கா (Africa) விமான நிலயங்கள்.—பெனினு (Benina), ஸோலம் (Sollum), ஸிடி எல் பரானி (Sidi El Barrani), பார்டியா (Bardia), அஸ்மாரா (Asmara), பர்ரியா (Burria), எல் ஆடம் (El Adem), அகோர்தாத் (Agordat).	1 விமானம்.	2 விமானங்கள், பலத்த சேதம்.
	இதாலிய சைன்யங்கள்.—ஸிடி பரானிக் (Sidi Barrani)குத் தெற்கு.	......	பலருக்குக் காயம்.

தேதி.	விரோதி விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	விரோதியின் விமான நஷ்டம்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும்.
2—12—40	(திங்கட்கிழமை).		
	பிரிடன் (Britain).		
	பகலில்.—ஒரு தென்மேற்குப்பட்டணம், லிவர்பூல் (Liverpool), தெற்குக் கடற்கரை பிரதேசம், தென் வேல்ஸி (Wales)ல் ஒரு பட்டணம்.	2 விமானங்கள்.	சொற்பச்சேதம். நஷ்டமில்லை.
	இரவில்.—மேற்கு இங்கிலாந்தி (England)ல் ஒரு பட்டணம்.		தீப்பிடித்தது, பல கட்டடங்கள் சேதமாயின.
	கிரீஸ் (Greece), அல்பேனியா (Albania).		
	கார்ப்பூ (Corfu), அதன் சுற்றுப்புறங்களும்.		வீடுகள் நாசமாயின, சில பொது ஜனங்கள் கொல்லப்பட்டனர்.

தேதி.	விரோதி விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	விரோதியின் விமான நஷ்டம்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும்.
3—12—40. (செவ்வாய்க்கிழமை).			
	பிரிடன் (Britain).		
	பகலில்.—கிழக்கு ஆங்கிலியா (East Anglia), ஸஸ்ஸக்ஸ் (Sussex), லண்டன் (London), சுற்றுப்புரங்கள்.		சேதம் சொற்பம், சிலருக்குத்தான் காயம்.
	இரவில்.—லண்டன் (London), மிட்லண்ட்ஸ் (Midlands), கடற்கரையில் அங்கங்கே பல இடங்கள்.		தீப்பிடித்து உடனே அணைக்கப்பட்டது.
4—12—40. (புதன்கிழமை).			
	பிரிடன் (Britain).		
	பகலில்.—டோவர் (Dover).		1 விமானம்.
	இரவில்.—லண்டன் (London) பிரதேசம் மிட்லண்ட்ஸி (Midlands)ல் பல இடங்கள்.		சேதம் சொற்பம். சிலருக்குக் காயம்.
5—12—40. (வியாழக்கிழமை).			
	பகலில்.–இங்கிலாந்தி (England)ன் தென் கிழக்கு, தென்மேற்குக் கடற்கரைகள்.		சொற்பசேதம். சில்ருக்குக்காயம்.
	சிறிய கப்பல்கள்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel).	......	......
	இரவில்.—தென் கிழக்குக் கடற்கரை பிரதேசம், லண்டன் (London), கிழக்கு ஆங்கிலியா (Anglia), தென் கிழக்கு இங்கிலாந்து (England).	15 விமானங்கள்.	வீடுகள் சேதம், சிலர் மாண்டனர், சிலருக்குக்காயம், 2 விமானங்கள், 1 விமானி பத்திரம்.
	முன்னேறும் கிரேக்கத் துருப்புகள்—அல்பேனியா (Albania).	......	பலனில்லை.

தேதி.	விரோதி விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	விரோதியின் விமான நஷ்டம்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டமும் படையெடுப்பால் விளைந்த சேதமும்.
6—12—40. (வெள்ளிக்கிழமை).			
	பிரிடன் (Britain).		
	லண்டன் (London)பிரதேசம், ஒரு தென் மேற்குப் பட்டணம், பிரிஸ்டல்(Bristol) கால்வாயில் ஒரு பட்டணம். தெற்கு வேல்ஸி (Wales)லும் தெற்கு இங்கிலாந்தி(England)லும் சில இடங்கள்.	......	சொற்பசேதம். சிலர் இறந்தனர், சிலருக்குக் காயம். பல இடங்களில் தீப்பிடித்து உடனே அணைக்கப்பட்டு விட்டன.
7—12—40. (சனிக்கிழமை).			
	பிரிடன் (Britain).		
	பகலில்.—கிழக்கு, தென்கிழக்கு கடற்கரைகள்.	......	சேதமில்லை.
	இரவில்.—படையெடுப்பில்லை.	......	......
8—12—40. (ஞாயிற்றுக்கிழமை).			
	பிரிடன் (Britain)		
	பகலில்.—படையெடுப்பில்லை.	......	......
	இரவில்.—லண்டன் (London), அதனைச் சுற்றியுள்ள பிரதேசங்கள். லண்டனு (London)க்கும், கிழக்குக் கடற்கரைக்கு மத்தியிலுள்ள பல இடங்கள், தெற்கு இங்கிலாந்தி(England)ல் சில இடங்கள்.	2 விமானங்கள்.	பல இடங்களில் தீப்பிடித்து உடனே அணைத்து விடப்பட்டது. பலருக்குக் காயம். சிலர் மாண்டனர். நஷ்டமில்லை.
	அல்பேனியா (Albania).		
	பல பட்டணங்கள்—அல்பேனியா(Albania) கிரேக்கர் வசமிருக்கும் பாகம்.	......	......
9—12—40 (திங்கட்கிழமை).			
	பிரிடன் (Britain).		
	பகலில்.—வடகடல் (North Sea).	1 விமானம்.	......
	இரவில்.—படையெடுப்பேயில்லை.		

யுத்தக் குறிப்புகள்.

இந்தப் படத்தையும் பாருங்கள், அந்தப் படத்தையும் பாருங்கள்.

நாஜிகள் தலைவிரித்தாடக் கிளம்பி, ஹிட்லரும் நடுக்கமெடுத்திருந்த நடுநிலைமை தேசத்தார்களைப்பார்த்து "என்னுடன்சேர்" என்று பயமுறுத்தி அழைத்தபோது, பிரிடன் தனக்குச் சொந்தத்தில் வேறு முக்கியமான காரியங்களில் கவனம் செலுத்திக்கொண்டிருந்த போதிலும், ருமேனியாவிற்கும் கிரீஸிற்கும் அபயப்ரதானம் செய்தது. பிரான்ஸ் கீழே விழுந்தவுடன், இந்த இரண்டு தேசங்களில் ஒன்று பிரிடனை விட்டு நழுவி, ஜெர்மனியுடன் முதலில் கொஞ்சம் கண்ணடித்து, பிறகு அதனிடம் நணுகி, கடைசியாக ஜெர்மனியால் விழுங்கப்பட்டது; மற்றொரு தேசம் பேச்சுப்படி ஒழுங்காக நடந்து, காபராப்படாமல், அச்சு தேசத்தாரின் தாக்குதலை நெஞ்சழுத்தத்துடன் எதிர்த்து, விறட்டியடிக்கிறார்கள். இவர்களுக்குப் பக்கத்திலுள்ள தேசத்தார்களென்ன, அமெரிக்கா, ஜப்பான், யூரேஷியா முதலிய பிரஜைகளென்ன, இந்த விஷயங்களையெல்லாம் கவலையுடன் கவனித்து, பிரிடிஷார் ஜாமீனின் பொருமதி எவ்வளவு உயர்வானது என்று மதிக்க இடமுண்டாயிற்று; மேலும், ஒற்றுமையும், புத்துயிரும், ஜயமும் கொண்ட கிரீஸ் தேசத்துடன், சீர் குலைந்து, பணமிழந்து, கொலைகள், எந்நேரமும் நடக்கும் ருமேனியா தேசத்துதை ஒத்துப்பார்க்க முடியும். இதை அனுசரித்து இனி பேட்டி போடுவார்கள்.

அடாத தேசத் துரோகம்.

பியர் லவால் என்ற ப்ரெஞ்சு மந்திரி மகுடமணிந்தவரல்ல; ஆயினும், அச்சு தேசத்தார் காரியங்கள் கோணல் படுவதைக்கண்டு அவர் 'சஞ்சலப்பட்டுக் கொண்டுதானிருப்பார். 'க்விஸ்லிங்' என்ற பெயரே இழிவான சொல்லாகி விட்டது; அதனினும் இழிவாகப் போய்விட்டது 'லவால்' என்ற பெயர் நமக்கே அப்படித் தோன்றினால், ப்ரெஞ்சுக் காரருக்கு அவர் பெயர் இன்னமும் எவ்வளவு நாற்றமெடுத்திருக்கவேணும்! ஒரு காலத்தில் பொருப்பு ஜாஸ்தி கொண்டிருந்த இந்த மந்திரியானவர், தன் தேசத்தாரை படுத்தாத பாடு படுத்திய பாபிகள் கைகளை நக்குவதானது கண்டாளிப்பாகவும் கேவலமாயும் இருக்கிறது. "விஷியிலுள்ள வயோதிகர்கள்" ஸ்திதியை நினைத்து பிரிடன் பிரதம மந்திரி முதற்கொண்டு எல்லா பிரிடிஷாருமே வருந்தி, ஆயினும் அவமதிப்புடன் கூடிய அனுதாபமும் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, அவர்கள் நிலைமையின் உண்மையான கஷ்டமும் இவர்கள் மனதிற்கு வந்திருக்கிறது. பெடேன், வேகான் போன்றவர்கள் தங்கள் காம்பீர்யத்தை முழுவதும் இழந்து விடவில்லை; அவர்கள் சுயமதிப்பும், அரசியலில் உண்மை உணர்ச்சியும் திரும்பி வரும் சின்னங்கள் காணப்படுகின்றன. ஆனால், லவாலோ.......................!

சுயேச்சையுள்ள ப்ரெஞ்சுக்காரர்கள் மனோபாவமென்றுலோ தளகர்த்தர் டி காலும் (General De Gaulle) பியர் லவாலே சண்டையிடும் ஸ்தலங்களில் சந்தித்தாரானால், அந்த போர்வீரன் இந்த நாமிருதா பேர்வழியுடன் சண்டை போடுவதே இழிவென்று நினைப்பாரென்று நினைக்கிறேன். தனது தேசத்தை மேலும் மேலும் அவமானத்திற்குட்படுத்தி, கொள்ளையடிக்கச் செய்து, நாடிழக்கப் பண்ணி, காரியுமியப்பட்ட, ஜெர்மானியருக்கு அடிமைப் படச்செய்து இனப்படப் படுத்துகிறதில், பிரான்ஸ் தேசத்திலுள்ள ராஜ வம்ச விசுவாசிகளோ, நூறு குடும்பத்தாரோ, பாதிரிகளோ, பெரும் வியாபாரிகளோ, யாரும் இவரை ஆதரிக்க வில்லை யென்பது நிச்சயம். இக்காலத்தில் யந்திர பலத்தால்தான் இவர் இப்படி செய்கிறார் என்று எண்ணவேண்டும். நூற்றுக்கணக்கான பீரங்கி வண்டிகள் (tanks) ஆயிரக்கணக்கான யந்திர பீரங்கிகள், விமானப்படைகள், இவைகளைக் கொண்டு முன் காலத்தில் ஆவேசங்கொண்டு எதிர்க்க வல்லவர்களாயிருந்தும், நிராயுத பாணிகளாகச் செய்யப்பட்டு அந்தக் காரணத்தால் நிர்கதியாகவிருக்கும் ஜனங்களை அடக்கியாளலாம் போலும்.

டிராமாக்காரர் ரிப்பன்டிராப்.

ஜனங்கள் மனதைக் கவரக்கூடிய ஆட்டங்கள் இன்னவையென்று தெரிந்து கொள்ள எப்படி பெரும்லாபத்தில் கண்ணுள்ள டிராமா கம்பெனி மானேஜர்கள் மோப்பம் பிடித்துக்கொண்டிருப்பார்களோ அதைப்போலவே தாங்கள் அக்கரை கொண்டிருக்கிற அயல் நாடுகளிலுள்ள ராஜீயவாதிகள் சம்பந்தமாக ஜெர்மன் அந்நிய நாட்டு இலாகா மோப்பம் பிடித்த வண்ணமாகயிருக்கும். ஜனநாயக ஆட்சியில் அதிலும் பிரிடனிலுள்ள ஜனநாயக ஆட்சிமுறையில், வெகுதுவேஷம் கொண்டவரும், அரசியல் அதிகாரத்திலிருந்து வெகுநாள்வரை ஒதுக்கி வைக்கப் பட்டிருந்த லவாலானவர் பேரில் ஜெர்மனியருக்குக்கண். அந்தத்தினுசு பேர் வழியை ஜெர்மானியருக்கு நன்கு தெரியும்; நெடுநாள் சிநேகிதர்களும் ஒத் தாசைக்காரர்களுமாகவிருந்த பிரிடிஷாருடன் எதிர்த்துப்போராடும்படி தன் நாட்டை மாட்டிவிட இவரே சரியான ஆள் என்று கருதினார்கள்.

ஆகையால், ஆபிரிக்காவில் பிராஞ்சுக்குச் சொந்தமான நாடுகளில், எவை டி காலே (De Gaulle)ச் சேர்ந்து விட்டனவோ, அவைகளை மறுபடி கைப்படுத்த ஏற்பாடு செய்து, அதன் பயனாக 'சுயேச்சை பிரெஞ்சு' (Free French)க்காரர் களை பிரிடிஷ் துறைத்தனத்தார் உதவி செய்யும்படி பண்ணி அதன் பயனாக விஷி கவர்ன்மெண்டார் யுத்தத்தில் இழுத்துவிடவேண்டுமென்று ஹிட்லரின் யோசனை. அப்படிச்செய்தால் பிரான்ஸுக்கு விரோதமான காரியமென்று சொல்லி, டோலானி லுள்ள (Toulon) பிரெஞ்சு கப்பற்படையைக்கொண்டு பிரிடிஷை எதிர்க்கச் சொல்லலாம். இந்த எண்ணத்துடன்தான் ஜெர்மன் சமாதான கமிட்டியார் இந்தப்படையை யுத்த முறையில் வைத்திருக்கிறார்கள்.

நல்ல யோசனை!—ஹாஸ்யம் உண்டாக்கக்கூடிய விதமாக தன் விரலால் தன் கண்ணைக் குத்திக்கொள்ளுவதுபோல் ஜெர்மானியர் கிணறு வெட்டி பூதம் கிளம்பு வதுபோல் இப்போதும் ஆய்விட்டது. பிரெஞ்சுக்காரரின் அனுதாபத்தையு

ஆதரவையும் தேடவேண்டிய நிலைமையில், திடீரென்று லோரேன் (Lorraine) மாகாணத்தை ஒரு விழுங்காய் விழுங்கி அங்கிருந்த பிரெஞ்சுக்காரரையும் ஊரை விட்டு விரட்டி விட்டார்கள் ("நிச்சயமாய் ஐரோப்பாவில் வேறு நாடுகள் அடையும் எண்ணமே கிடையாது" என்று ஹிட்லர் ஒரு சமயம் பறைசாத்தினவரல்லவா ?). இதைக்கண்டு ஜெர்மானியர் வியாபித்திருக்கும் பிரெஞ்சு மகாணங்களிலுள்ளவர்களும், அவர்களால் வியாபிக்கப்படாத மாகாணங்களிலுள்ளவர்களும் பிரமித்துப்போனார்கள். ஆகையால், லவால் மனதை கவரக்கூடிய விதமாக, பிரெஞ்சு கவர்ண்மெண்டை பாரிஸ் நகரத்திற்குக்கொண்டு வந்தோ, வேறு எவ்விதமாகவோ ஒரு காரியம் செய்தாலெழிய இப்போது அத்தேசத்திலுருக்கும் விரோதமானது வெல்லம் போல் கிளம்பி விடும்.

பட்டினிகிடக்கும் ஹங்கேரி.

சென்ற 20 வருஷத்திய ஐரோப்பிய அரசியல் விஷயங்களில் அக்கரையுள்ளவர்களுக்கு ஹங்கெரியின் சரித்திரம் மனதை கவருந்தன்மையுள்ளது. ஐரோப்பா முழுவதிலும் காணப்பட்ட ஒவ்வொரு மனோபாவமும் எண்ணமும் ஹங்கேரியில் தனிமையில் காணலாம். ஹங்கேரிக்கு சிநேகிதர்கள் முன்னே யார்? இப்போது யார்? விரோதிகள் யாராயிருந்தார்கள் ? இப்போது யார் ? யார் சிநேகமாகவோ விரோதமாகவோயிருந்து அப்படியோ இப்படியோ இனியும் இருக்கக்கூடியவர் ?

ஹாப்ஸ்பர்க் அரசாங்கத்தார் ஆளுகையிலிருந்தபொழுது, அதன் கீழ் ஸ்லோவாக்கரும், ருதீனியர்களும், ருமேனியர்களும், செர்ப்களும், க்ரோட்களுமாக 5 கோடியே 20 லக்ஷம் ஜனங்கள் இருந்தார்கள்.

சென்ற மகா யுத்தத்திற்கு பின், அதன் ஜனத்தொகை 85 லக்ஷமாகப் போய் விட்டது. பேலா கூன் (Bela Kun) என்றவன் மூலாஜாவில் அபேதவாதத்தின் வாசனையும் கொஞ்ச காலம் அனுபவித்தது.

அந்நாட்டில் ஏராளமான நிலம்பலம் வைத்து அனுபவித்தும், உழவர்களையும் அடிமையாக்கிக்கொண்டும் வாழ்ந்து வந்த சங்கீத அபிமான செல்வர்களுக்கு இது பிடிக்கவில்லை ; ஆகையால் ராஜ பரம்பரையை மீட்டிக்கொண்டு வருவதாக வாக்குக் கொடுத்து ஜனங்களை வசமாக்கி எச்சமயம் எந்த தேசம் வலுவாக இருந்ததோ அந்த தேசத்தை பல்லைக்காட்டி நயந்து கொண்டார்கள்.

சிறிய உடன்படிக்கை தேசத்தாரையும், அவர்களை ஆதரித்த பிரான்ஸ் தேசத்தையும் வெறுத்தார்கள். ஜெக்கோஸ்லோவாகியாவும், ருமேனியாவும் யூகோஸ்லாவியாவும் ஒன்று கூடி வலுத்திருந்தால் தங்கள் நாட்டில் முன் அடங்கியிருந்த செர்ப், க்ரோட், ருமேனிய பிரஜைகளை எப்படி மறுபடி அடையமுடியும். இதாலியா? ஆம் இதாலி உதவிபுரியும். உதவிபுரியக்கூடும். பீடர் என்ற அரசனை மார்செல்ஸில் சென்ற கூட்டத்தில் இதாலியருமுண்டல்லவா ?

ஆஸ்திரியாவை ஒரு நொடியில் ஹிட்லர் அமுக்கிய பின், ஆஸ்திரியாவையும், ஹங்கேரியையும் இதாலி ரக்ஷிக்கும் பாவனையாக பேசியதெல்லாம் ஏளனத் திற்கிடமாயிருந்தது. இதாலியா? உடைந்த சட்டி! "ஜெர்மனி கைதூக்கப் போகிறது. ஆயினும் அபிஸீனியா விஷயமாக இதாலியரைக் கண்டிப்பதை நாம் ஆதரிக்க வேண்டாம். ஆனால் அபேதவாத கக்ஷியாரை நாம் சேர்ந்து கொண்டு சர்வதேச சங்கத்திலிருந்து விலகிக்கொள்வோம். அப்படியானால் பாத்தியங்கள் ரொம்ப உள்ள நமது வகுப்பினர் சீர் குறையாமலிருக்கும்". வருஷம் 1938. ம்யூனிக் பட்டணம். (பேஷ்! ஜெக்கோஸ்லோவாகியாவில் இருந்து பத்து லக்ஷம் ஜனங்கள் நமது ஹிட்லர் கொடுத்து விட்டார்!) ஒரு வருஷம் சென்ற பின், ப்ரேக்கில் (Prague) ஜெர்மானியர் பிரவேசித்த பின், நழுவின சாம்ராஜ்யத்திலிருந்து ருதீனியா திரும்ப கைப்பற்றிக் கொள்ளப்பட்டது. 1939-ல் ஹங்கெரியின் எல்லைப் புறம் கோணலுமாணலுமாய் ரஷியாவை ஒட்டி இருக்கிறது. யூகோஸ்லாவியா, ருமேனியா போன்ற பிசிறுகளுக்கு ரஷியாவே போஷகர். அரசியல் வகை சிநேகங்கள் பாதி வருஷத்தில் பிளவு பட்டன. எப்படி தூக்கி வாரிப்போட்டது! ரஷிய-ஜெர்மானிய உடன் படிக்கை! செய்ய வேண்டியது ஒன்றுதான். பெரிய எஜமானனுக்கு சலாம் போடவேணும். ஜெர்மன் ஆதரவைத் தேடவேண்டியது. ஆனால் அவர்கள் கையில் முழுவதும் அகப்பட்டுக்கொள்ளக்கூடாது.

பலே! இன்னுமொரு லாபம். டிரான்ஸில்வேனியாவில் 17,000 மைல் விஸ்தீர்ணமுள்ள பிரதேசம். இந்த வித்தையில் மிச்சமிருக்கிறது! மூவர் உடன் படிக்கையில் சேருவோம். இதாலியில் பண்டமில்லை. பெரிய கூட்டுக் காரன் தயவிருந்தால், போலண்ட் பக்கம் உபகாரமாகவிருக்கும். (போலண்டாக விருந்த பக்கம்!)

என்ன சுலபமான விழுக்காடு! இந்த கந்தரகோளத்தில் நேசதேசத்தாருக்கு இரண்டு விதத்தில் திருப்தி. தன்னலம் கருதி 20 வருஷகாலம் நடந்து வந்த ஹங்கெரி பிரபுக்கள், அவர்கள் எதிர்கால க்ஷேமத்தை கொஞ்சமும் பாராட்டாத ஒருதேசத்தாரின் சொற்ப பங்குக்காரனாக இருக்கிறார்கள். அரசியல் காரியங்களில் இதாலி அஸ்தங்கதமாகப்போவதில் மத்திய ஐரோப்பாவில் இதாலியின் பிரா முக்கியம் குறைந்து ஜெர்மனியின் கை மேலேறிவிட்டது என்பது இரண்டாவது விஷயம். முஸொலினியைப்போல் காரியத்தை கெடுத்த ஒரு தலைவனை இதாலியர் எவ்வளவு காலந்தான் பொருப்பார்கள்?

காற்றின் போக்கு.

(i) பிரிடனுக்கு முடிந்தவரை சகாயம் செய்யவேணுமென்று அமெரிக்க தொழிலாளி சங்கத்தின் தலைவரான வில்யம்க்ரீன் என்பவர் நியூ ஆர்லியன்ஸ் என்ற ஊரில் அழுத்தமாகச் சொன்னார்.

(ii) அமெரிக்க யுத்த இலாகா மந்திரியான Mr. ஸ்டிம்ஸன், அடியிற் கண்ட விதமாக பிரிடிஷ் தொழிலாலிகளைப்பற்றிப் பெருமைப் படுத்தி நவம்பர் 19-ல் பேசினர்:—"Mr. பெவின், Mr. மாரிஸன், இவர்கள் தலைமையின்கீழ் முன் எப்போதும் இல்லாத விதமாக இப்போது தளவாடங்கள் செய்கிறார்கள். அவர்கள் உழைப்பால் அவர்கள் நாடான தீவை தகர்க்க முடியாத சுயேச்சைக் கோட்டையாக செய்கிறார்கள்.

(iii) முஸோலினி கடைசியாகப் பேசினகாலத்தில், சபையை நேரில் பார்க்காமல், ரேடியோ மூலமாக பேசினர் என்பதை நினைத்து அமெரிக்க பத்திரிகைகள் புரளி செய்கின்றன.

(iv) நேசதேசத்தாரின் 'இப்பேற்கொத்த பிரசாரத்திற்கு மாராக, 20 லத்தின் அமெரிக்க நாடுகள், நாஷனல் ரேடியோ கம்பெனி யின் லத்தீன்-அமெரிக்கா ஒலிபரப்புகளை செலவன்றியில் மறு ஒலி பரப்பலாம்.

(v) க்விஸ்லிங் என்ற தேச துரோகியை ஆதரித்தவர்கள் பலர் மறை வடைகிறார்கள்; ஆஸ்லோ நகரத்திற்கு சமீபம் ஒரு ஏரியல் ஒருவர் முழுகிக்கிடந்தார்.

(vi) இப்போது அமெரிக்காவிலிருந்து பிரிட்டனுக்கு அனுப்பப்படும் குண்டு போடும் பெரும் விமானங்கள் ஒவ்வொன்றும் 3,000 மைல் விஸ் தீரணத்தில் 8,000 பவுண்டு வரை குண்டுகள் போடும் சக்தி யுள்ளவை. சமீபத்தில் பெயரெடுத்த W-17 என்ற பறக்கும் கோட்டைகளெல்லாம் இப்போது கிழத்தன்மையடைந்த பிராய மாகிவிட்டன.

புதுக்கோட்டையின் உயர்தரமான தொண்டு.

யுத்த நிதிக்காக காலேஜில் நடந்த உற்சவம் முடிந்த மறுநாள் காலையில், அந்த கமிட்டியாரின் கௌரவ பொக்கிஷர் யுத்த நிதிக்கு ஈ-தர்பாரவர்களிடம் ரூபாய் 3,000-க்கு ஒரு செக் அனுப்பினர். வெகு சுறுசுறுப்பு, நல்ல தொகை!.

வெகு கவலையுடன் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த விழா செம்மையாக நடந்தது என்பதில் சந்தேகமில்லை. மூன்று நாள்வரை இடைவிடாது நாடகங் களும் சங்கீதக் கச்சேரிகளும், கிரிக்கெட் பந்தயங்களும், சில்லரை வேடிக்கை களும், ஜனங்களை உற்சாகப்படுத்தி ஆனந்திக்கச்செய்து தாராளமாக செலவும் செய்யும்படி செய்தன. மூன்று நாலு நாள் பெய்தமழை நின்று, மஹா-ா-ா-ஸ்ரீ ஹிஸ் ஹைனெஸ் ராஜா அவர்கள் சன்னுகமாக சவாரி செய்துவரும் சமயம் சூரியன் பிரகாசமாகத் தோன்றி, சுபசூசகமாகவிருந்ததை ஜனங்கள் பூரணமாக பிரயோஜனப்படுத்திக் கொண்டார்கள். மழையும் விழா முழுவதுமே தலையைக் காட்டவில்லை.

இந்த விழாவில் 'விறட்டல்' ஜாஸ்தி. கமிட்டி அக்கிராசனர் கமிட்டியாரை விறட்டினர், கமிட்டியார் கமிட்டியின் சக்கரங்கள் முழுவேகத்தில் ஓடும்படி விறட்டினர்கள், மஹா-ா-ா-ஸ்ரீ ஹிஸ் ஹைனெஸ் ராஜா அவர்கள் சன்னுகமாக விறட்டப்பட்ட வண்டியில் சவாரி வந்தார். இதன் லாபமென்ன வென்றால், அச்சுதேசத்தாரை விறட்டுவதில் சகாயம் செய்ய ஒரு நல்ல தொகை கிடைத்தது.

இந்தியாவும் யுத்தமும்.

(துருக்கியில் அங்காராவிலிருந்து பதிக்கப்படும் 'ஊலூஸ்' என்னும் 18—10—40உ பத்திரிகையிலிருந்து.)

அச்சு வல்லரசுகளுடன் பிரிடன் தான் வாழ்வதா அழிவதா என்பதற்காக நடக்கும் மன்ருட்டத்தில் பிரிடிஷ் டொமினியன்கள் தங்கள் தாய் நாட்டிற்கு ஒத்தாசை புரிய விரைந்து முன்வந்திருக்கின்றன. அச்சு வென்றால் அவைகளும் பிரிடனும் அடிமைகளாக வேண்டியதுதான் என்பதை அவைகள் உணர்ந்திருக்கின்றன. தனித்த கண்டமென்று சொல்லக்கூடிய பிரமாண்டமான இந்தியாவும் தைரியமாகத்தான் பிரிடிஷ் கட்சியை ஆதரிப்பதாகக் காட்டியிருக்கிறது.

ஆனல் இந்திய தேசீய வாதிகள் பிரிடிஷ் கட்சியை ஒருபுறம் ஆதரித்த போதிலும், இந்தியாவின் ஏராளமான மூலப்பொருள்களை உபயோகிப்பதால் பிரிடன் அடையக்கூடிய நன்மைகளை அடையவொட்டாமல் செய்யும் ஒரு மார்க்கத்தைப் பின்பற்றுகிருர்கள். அதாவது, பிரிடிஷ் வெற்றிக்கும் பிரார்த்திக்கிருர்கள்; பிரிடனின், யுத்த முயற்சிகளுக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய ஒரு ரீதியைக் கைக்கொள்ளுகிருர்கள். இந்திய தேசீய வாதிகளுக்கும் பிரிடனுக்கும் தகரார் சென்ற மகா யுத்தத்திற்குப் போகிறது. 1914-ம் வருஷ மகா யுத்தத்தில் பிரிடன் இந்தியாவுக்கு சுயராஜ்யம் கொடுப்பதாக வாக்களித்தது. ஆனல் யுத்தத்துக்குப் பிறகு பிரிடன் இந்தியாவுக்குக் கொடுப்பதாக ஒப்புக்கொண்ட ஆட்சி முறை இந்தியர்களுக்கு அதிருப்தியளித்தது. இந்திய அரசியலைப்பற்றி இந்தியருக்கும் பிரிடிஷாருக்கும் ஏற்பட்ட தகராரைக் குறித்து இங்கு விவாதிப்பது நமது எண்ணமல்ல. இருதிறப்பாரும் அது அது எடுத்துக்கொண்ட கட்சி சரியென்றுகூற ஒரு திருஷ்டிகோணம் இருக்கிறது. இந்தியர்கள் கட்டுப்பாடில்லாத ஆட்சி—ஏன், சுயேச்சையையே விரும்புகிருர்கள். பிரிடிஷாரோ இந்திய அரசியல் அமைப்பு சுயேச்சையை நிர்வாகிக்கக்கூடிய முதிர்ச்சியை இன்னும் அடையவில்லை என்று கூறிவருகிருர்கள். சமாதானகாலத்தில், இதுபோன்ற ஒருபிளவும், இதனைத் தீர்ப்பதில் ஏற்படக்கூடிய தொல்லைகளும் சகஜமென்று எண்ண இடமுண்டு. ஆனல் பிரிடனும் இந்தியாவும் உயிருக்கு மன்ருடும்போது தகரார் வளர்ந்து வருவது சகஜமாகுமா?

"எல்லா ஜாதியாரின் சுயேச்சைக்காக போராடும் பிரிடன் தோற்ருல், இந்தியாவிற்கு ஏற்படும் விடுதலை அர்த்தமற்றதாகும்."—இவ்வார்த்தைகளால், இந்திய தேசியத் தலைவரான காந்தி, பிரகிருதப் போராட்டத்தின் மகத்வத்தையும் மூக்கியத்தையும் சரிவர உணர்ந்திருப்பதைக் காட்டுகிருர்.

இப்படிக்கிருந்தும் இந்தியாவிலிருந்து சமீபத்தில் கிடைத்த தகவல்களில் இருந்து காந்தி பிரிடனுக்கு ஒரு ஒத்தாசையும் செய்யப்போவதில்லை என்பதுடன் நில்லாமல், பிரிடனின் யுத்த முயற்சிகளுக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய ஒரு வழியை அனுசரிக்கப்போவதும் வெளியாகிறது. பலாத்காரத்தை என்றும் காந்தி ஆதரிக்கார் என்பது எல்லோருக்கும் தெரியும். இந்த யுத்தத்துக்கு முன்பும் பிரிடிஷாரை காந்தி எதிர்த்தபொழுதும் அவர் ஆயுதம், பலாத்காரம் இவைகளைக் கடைபிடிக்கவில்லை, சத்தியாக் கிரஹத்தையே கடைபிடித்தார். தற்பொழுதும் இந்தியாவில் பிரிடிஷாருக்கு விரோதமாகக் கலகத்தை விளைவிக்க அவர் உத்தேசிக்கவில்லை. ஆனல் பிரிடனுக்கு ஒத்தாசை செய்யக்கூடாதென்ற பிரசாரத்தை நிறுத்தமாட்டேன் என்று அவர் வைஸ்ராய்க்கு அறிவித்தார். கடைசியாக காந்தியும் வைஸ்ராயும் சந்தித்தபொழுது இந்தியத் தலைவர் அடியிற் கண்ட விஷயங்களை சமர்ப்பித்ததாகத் தெரிகிறது.

(1) இந்திய தேசியவாதிகளும் காந்தியும் பிரிடிஷார் ஜயிக்கவேண்டு மென்று விரும்புகிருர்கள்.

(2) இருந்தபோதிலும் இந்தியர்கள் பிரிடனுக்கு ஒத்தாசை செய்வதை தடுக்கும் பிரசாரத்தை காந்தி நிறுத்தமாட்டார்.

இவ்விரு பரஸ்பரமுரண்பாடான மனப்பான்மைகளைத் தன்னல் புரிந்து கொள்ள முடியவில்லை என்றும், இவ்வித பிரசாரத்தை தான் தடுக்காமலிருக்க முடியாதென்பதையும் காந்திக்கு வைஸ்ராய் அறிவித்தார்.

பிரசார யுத்தத்தை நடத்தப் போகிறவர்கள் காந்தியைப் பின் பற்றியவர்கள் என்றும், நேராடி காந்தியல்ல என்றும் இப்பொழுது அறிவிக்கப்படுகிறது. இதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பிடிபட்டு சிறைப்படுவதும், அதனல் கிளர்ச்சிக்குத் தக்க பலமேற்படவேண்டும் என்பதும் காந்தியின் நோக்கம். அச்சின் வெற்றி ஆபத்து என்று கூறுகிற காந்தி, அச்சு வல்லரசுகளுக்கு இதைக் காட்டிலும் அனுகுணமான ஒரு காரியத்தையும் செய்திருக்க முடியாது. ஜெர்மன் இதாலிய ரேடியோக்கள் இதனை வெறுமனே விடுமா? இந்தியாவில் பிரிடன் சமாளிக்க முடியாமல் தவிக்கும் கஷ்டங்களை அதிசயோக்தி செய்து வர்ணிக் கின்றன. இந்திய நிலைமையை நன்கறிந்தவர்களுக்கு அச்சு ஒலிபரப்புகள் உண்மையல்லவென்பது நன்கு விளங்கும். அது எதாயினும் சரி, காந்தி செய்வது இந்தியா முழுவதற்கும் பிரதிநிதி என்ற முறையில் அல்ல. ஏழு கோடி முகமதியர்கள், பிரிடிஷார் எதற்காகப் போராடுகிருர்கள் என்பதைப் புரிந்து கொண்டு அதை ஆதரிக்கிருர்கள். அரைச் சுதந்திரமும் முழுச் சுதந்திரமும்

உள்ள அரசர்கள், எப்பொழுதும்போல், தாராளமாகப் பொருள் உதவி செய்திருக்கிறார்கள். பிரிடிஷ் கட்சிக்கு தனக்கிருக்கும் அனுதாபத்தைக் காந்தியே மறைப்பதில்லை. ஆயினும், தான் கொண்டுள்ள நோக்கத்தை மிகைப்படுத்தி வற்புறுத்துவதால் காந்தி அச்சு வல்லரசுகளின் ஆள்போல் நடக்கிறார் என்பது வெளிப்படை.

அச்சுப் பிரசாரம் நம்மை இந்தியாவில் பிரிடிஷ் ஆட்சி கொடுங்கோலாட்சி என்று நம்பும்படி செய்ய முயற்சிக்கிறது. காந்தியோடும் அவருடைய கட்சியாரோடும் சமாதானத்துக்கு வரவேண்டுமென்று பிரிடிஷ் அரசாங்கம் எடுத்துக்கொண்ட பிரயாசைகள் இதனைப் பொய்யாக்கும். அச்சு ஆக்கிரமித்த நாடுகளில் பரவியிருக்கும் கொடுங்கோன்மை, பயங்கரத்துக்கு பதிலாக, சச்சரவு ஒழிக்கவேண்டி பிரிடிஷார் பொறுமையுடனும் நிதானத்துடனும் இந்தியாவில் நடந்துகொள்ளுகின்றனர். இந்தியாவுக்கு எவ்வித அரசியல் மாறுதலேற்பட வேண்டும் என்று நாஜி ஜெர்மனி அல்லது பாஸிஸ்டு இதாலியின் பிரதிநிதிகளுடன் காந்திபோன்ற ஒரு தலைவர் போலந்திலோ, ஸெகோஸ்லாவேகியாவிலோ, அல்பேனியாவிலோ பேரம் செய்து பேச ஆரம்பித்தால் அவர் கதி என்னவாகும்?

இதனால் அச்சு வல்லரசுகள் நடக்கும் மாதிரி இந்தியாவில் பிரிடன் நடக்க வேண்டும் என்று ஒருவரும் விரும்பவில்லை. பிரிடன் அப்படிச் செய்தால் அது எடுத்த கட்சியை அது பொய்த்ததாகும். ஆயினும் காந்தி அனுசரிக்கும் முறைகள், விடுதலை சுயேச்சை இவைகளில் நம்பிக்கையுள்ளவர்களின் அனுதாபத்தை இழக்கச் செய்வதாயிருக்கிறது.

ஐரோப்பாவில் ஹிட்லரின் "பெரிய ஏற்பாடு."

ஸல்லி என்பவருடைய திட்டத்திற்கும் அதற்கும் உள்ள பேதங்கள்.

இதாலியின் தோல்விகளைப்பற்றி ஜெர்மன் தலைவனுடைய மனோநிலை.

ஸ்வேச்சாதிகாரிகளும் பால்கன்களும்.

(விக்ஹாம் ஸ்டீட் ஒலிபரப்பியது).

ஒரு வழியில், ஒரு அம்சத்தில்—ஒரு அம்சத்தில் மட்டும்தான். இது ஹிட்லருடைய வாரம். இதைத் தங்கள் வாரம் என்று சொல்ல கிரேக்கர்களுக்கு உயர்தர பாத்தியமிருப்பினும், ஹிட்லர்தான் நாடகமேடையின் முன் எல்லோருடைய வீக்ஷணத்தில் நின்று கொண்டான்.

பிளாரன்ஸில் முஸோலினியையும், பிரான்ஸ் தேசத்தில் எங்கேயோ ஸர்வ சேனாபதி பெடேனையும், இஸ்பானிய எல்லையில் சேனாபதி பிராங்கோவையும், பாரிஸில் லாவாலையும் சந்திப்பதற்காக ஐரோப்பாவைச் சுற்றி ஓடுவது ஹிட்லருக்கு கௌரவக் குறைவு என்றும், அவ்வளவு மனதைக் கவரக் கூடியதல்லவென்றும், யாரோ, ஒருகால் கோயபல்ஸோ ஹிட்லரிடம் சொல்லியிருக்கலாம்.

நிச்சயமாக, ஜயசாலியான ஸ்வேச்சாதிகாரி, ஒரு கண்டத்தின் பிரபு, ஒரு புதிய ஐரோப்பிய ஏற்பாட்டிக்குப் பெரிய உபாயத்தை சிருஷ்டித்தவர் வீட்டில் இருந்துகொண்டு, இதரர்களை தன்னிடம் வரும்படி கட்டளையிடுவது தான் உசிதம். அதனால் இந்த வாரத்தில் சில சின்ன கீர்த்திமான்கள் பெர்லினிலும் பெர்க்டஸ்காடனிலும் ஹிட்லரின் பேட்டிக்கு காத்துக் கொண்டிருக்கும் காக்ஷியைக் கண்டோம்.

பெர்லினில் விழும் பிரிடிஷ் வெடிகளின் சத்தம் காதில் விழுகையில் ஜெர்மன் தலைநகரை விட்டு ரஷியப் பிரதம மந்திரி மாலடோவ் வெளியேறினர். உடனே ஸ்பானிய வெளிநாட்டு மந்திரி ஸீனர் ஸூனியர், முஸோலினியின் மருமகனும் வெளிநாட்டு காரியதரிசியுமான சியானோ பிரபுவும் பல்கேரியா தேசத்து அரசனான போரிஸ் அரசனும் ஹிட்லரின் காலடியில் உட்கார ஓடினார்கள். இப்பொழுது ஹிட்லரின் சிற்றரசான ருமேனியாவின் பிரதம மந்திரியான சேனாபதி ஆண்டனஸ்க்யூ கடைசியில் போனார்.

ஹிட்லருடைய பெரிய ஏற்பாட்டை ஆதரித்து, பெர்லின், ரோம், டோகியோ அச்சின் அங்கத்தினராக கையெழுத்துச் செய்த ஹங்கேரி

தேசத்தின் வெளிநாட்டு மந்திரியையும், காரியதரிசியையும் சந்திப்பதற்காக வீயன்னுவுக்குத் திடீரென்று ஹிட்லர் புறப்பட்டுப்போனுன்.

"இது ஆரம்பம்தான்"

ரிப்பண்டிராப் சொல்லுகிறபடி இதுதான் ஆரம்பம். எல்லா இதர சிற்றரசுகளும் கையெழுத்துச் செய்யும்படி அழைக்கப்படுவார்கள். வீயன்னுவில் ஹங்கேரி கையெழுத்துச் செய்த பிறகு ரிப்பன் டிராப் சொன்னுன். "ஒன்று சேர்ந்த ஸமஸ்தானங்களின் சேனைகளும், அந்த ஒத்துமையின் கௌரவமும் வெகு சீக்கிரத்தில் சமாதானத்தை மீட்க உதவி செய்யும் என்று எனக்கு நம்பிக்கையிருக்கிறது" என்று.

இதற்குமுன் இதைப்போல ஏதோ கேட்டதுபோல் இருக்கிறது. ராணுவமற்றிருந்த ரைன்லாந்தை ஹிட்லர் வியாபித்துக்கொண்ட பிறகு 1936-ல் ஹிட்லர் "இதுதான் சமாதானம். பிரான்ஸ் தேசத்தை இனி ஒன்றும் கேட்கவில்லை" என்று சொல்லவில்லையா? 1938வது பிப்ரவரி மாதத்தில் ஹிட்லர் ஆஸ்டிரியாவைப் பிடித்துச் சேர்த்துக்கொண்டதால் தன் மனோதரங்கள் பூர்த்தியாகிவிட்டதாகவும் இனி, உபரியான பிரதேசங்களில் ஆசையில்லை என்றும் சொல்லவில்லையா? ஜெகோஸ்லவேகியாவில் உள்ள ஸ்யுடேட்டன் ஜெர்மானியர் தாமாகத் தீர்மானித்துக்கொள்ள வேண்டுமென்றும், ஜெக்கர்களையாவது, இதர ஜெர்மானியரல்லாதவரையாவது சுத்த ரத்தமுள்ள ஜெர்மானிய ஆதீனத்திற்குள் எக்காரணத்தை முன்னிட்டும் வைத்துக்கொள்வதில்லை என்றும் 1938-ல் ம்யூனிக் ஒப்பந்தத்தில் கையெழுத்துச் செய்த பிரிடிஷ், பிரஞ்சு ராஜயபார நிபுணர்களிடம் ஹிட்லர் உறுதி சொல்லவில்லையா?

அதற்குப் பிறகு ஜெகோஸ்லவேகியாவை அழித்து வியாபித்துக் கொள்ளவில்லையா? டான்ஸிகை எடுத்துக்கொள்ளவில்லையா? போலந்தை தானும் ரஷியாவும் பங்கிட்டுக்கொள்ளவில்லையா? ஆகையால் இப்பொழுது அவனே, அவனுக்காக ரிப்பன்டிராப்போ, ஐரோப்பா முழுமையும் தான் அடையப்போகிறேமென்ற உணர்ச்சியின்பேரில், கூடிய சீக்கிரம் சமாதானம் ஏற்படப்போவதாகப் பேசினுல், சொன்னதெல்லாம் நம்பும் என்னைப்போன்ற ஸ்வபாவத்திற்கே ஒரு சந்தேகம் தோன்றும்.

"ஐரோப்பா" வென்றபதத்தில் பிரஞ்சு, பெல்ஜிய, டச்சு, போர்ச்சுகீஸ் குடியேற்ற நாடுகளையும் முன் ஜெர்மானிய குடியேற்ற நாடுகளாயிருந்தவைகளையும் உட்படுத்த முடியுமல்லவா? மேலும் இந்தப் பிரதேசங்கள் எல்லாவற்றையும் ஆதீனப்படுத்திக்கொண்டு இன்னும் கொஞ்சம் உபரியாக கேட்கலாமல்லவா? ஹிட்லரின் மனதிலுள்ள சேஷ்டைகளும், அவனுடைய உபாயங்களும் வேணுமானுல் எனக்குத் தெரியும். ஆனுல் நான் ஹிட்லருடைய அந்தரங்கத்தை அறிந்தவனல்ல.

நான் அவனுடைய அந்தரங்கத்தை அறிந்தவனுயினும், அவனிடம் எனக்கு நமபிக்கையில்லை. மேலும் அவனுடன் கையெழுத்து செய்தவர்களும், இன்னும் கையெழுத்துச் செய்யப்போகிறவர்களும் என்னைக்காட்டிலும் அதிகமாக அவனிடம் நம்பிக்கை வைத்திருக்கிருர்கள் என்று எனக்குத் தோன்றவில்லை.

எல்லாம் நாணய பிரச்னைதான்.

இந்த நாணய பிரச்னையினால்தான் அவன் எல்லா ஆஸாமிகளையும் தன்னிடம் வரும்படி ஆக்ஞாபிக்கிறான். அவன் யாவராலும் ஜெயிக்க முடியாதவன் என்ற நம்பிக்கையை மறுபடி உண்டாக்க வேண்டுமென்று அவனுடைய கருத்து. ஏனெனில் அந்த நம்பிக்கை யெல்லாம் உலகத்தில் அகன்றுவிட்டது. இங்கிலாந்து படையெடுப்பு நடக்கவில்லை. அமெரிக்க ஐக்கிய ஸமஸ்தானங்களில் தலைவர் தேர்தல் அவனிஷ்டத்துக்கு விரோதமாயிற்று. ஜெர்மன் தொழிற்சாலைகளும், துறைமுகங்களும் பிரிடிஷ் வெடிகளால் நொறுங்குண்டன. இதாலி கிரீஸின்மேல் படையெடுத்தது விபரீதமாகயிருக்கிறது. டாரண்டோ வளைகுடாவில் இதாலிய யுத்தக்கப்பல்கள் சிதறுண்டன. ஹிட்லரை ஜெயிக்க முடியாதென்ற தோற்றமும் சிதறுண்டது. இங்கிலாந்திலுள்ள "காவெண்ட்ரீ" என்ற நகரையும் இதர பிரிடிஷ் தொழிலாதாரங்களையும் வெடியால் அடிப்பதும் ஹிட்லரும் நம் யுத்த பிரயத்தனங்களை முறித்துவிட முடியுமென்று அவனைப் பேட்டிகாணவரும் ஆஸாமிகளுக்குக் காண்பிப்பதற்காக வென்று தோன்றுகிறது. இதில் அவன் யத்தனம் பலிக்கவில்லை. இனியும் பலிக்கப் போகிறதில்லை. அவனுடைய பெரிய ஏற்பாட்டின் பிரகாரம் ஐரோப்பாவை ஒன்று சேர்ப்பதற்கு ஒருபடியாக, கிழக்கு ஐரோப்பாவை தன் ஆதீக்கத்திற்குள் கொண்டு வரும் ஏற்பாட்டை பூர்த்தி செய்து கொள்ளும்வரை, தான் இங்கிலாந்தின் யுத்த பிரயத்தனத்தை முறிக்கமுடியும் என்ற எண்ணத்தையுண்டாக்க முடியுமென்று அவன் இன்னும் நம்புகிறான்.

அவனுடைய மனதை நான் சரியாக வாசிக்க முடியுமானால், இந்த "பெரிய ஏற்பாட்டை" ஒரு "ஸமாதான இயக்கம்" மூலமாக ஆரம்பிப்பான் என்று தோன்றுகிறது. அமெரிக்காவில் தலைவரின் தேர்தலுக்கு முன்பு இவ்வியக்கத்தை ஆரம்பிக்க வேண்டுமென வெண்ணினான். ஆனால் சரிப்படவில்லை.

தேச சரித்திரத்தை வாசிப்பதே ஹிட்லர் தான் காலம் போக்கும் வழிகளில் ஒன்று என்று அடிக்கடி சொல்லி இருக்கிறான். அது நிஜமோ பொய்யோ தெரியவில்லை. ஆனால் இந்த "பெரிய ஏற்பாடு" என்ற எண்ணத்தை எங்கிருந்து எடுத்தான் என்பதை அறிவது கடினமல்ல.

ஸல்லி பிரபுவின் பெரிய ஏற்பாடு.

பிரான்ஸு தேசத்தில் 1589-ம் ஹூ முதல் 1610-ம் ஹூவரை ஆண்டுவந்த நான்காவது ஹென்ரி என்ற வெகு பிரக்யாதி பெற்ற அரசனுடைய உபாயமாதலால் அது மிகப் பழய விஷயம். நான்காவது ஹென்ரி பெரிய அரசன். அவனிலும் பெரிய மந்திரியை அடைந்த அத்ருஷ்டமும் அவனுக்கிருந்தது. அவர்கள் இருவருமாக ஐரோப்பாவை ஒன்றுபடுத்தி அமைதி நிலவச்செய்ய ஒரு பெரிய ஏற்பாட்டை சிருஷ்டித்தார்கள்.

வலிமைக்கு முன் செம்மை மதிக்கப்படவேண்டுமென்ற கொள்கையை ஸ்தாபிக்க ஒரு ஐரோப்பிய மகாசபை ஒன்றை ஏற்படுத்துவதற்காக அவர்கள் இருவரும் பிரயத்தனப் பட்டார்கள். இப்பெரிய ஏற்பாட்டைத் துவக்க எல்லாம் தயாராக இருந்த காலத்தில் நான்காவது ஹென்ரி கொலை செய்யப்

பட்டார்.

தன்னுடைய அரசன் இறந்த பிறகு ஸல்லி பிரபு அப்பெரிய ஏற்பாட்டின் விவரங்களை வெளியிட்டார். அதன்படி மகா சபையில் புதிய ஐரோப்பாவின் பதினைந்து ஸமஸ்தானங்கள் பரஸ்பரமுள்ள தாரதம்யத்தை வைத்து பிரதிநிதித்வம் அடைந்தார்கள். அந்த மகாசபை தன் அங்கத்தினர்களுக்குள்ள தகராறுகளை சமாதானமாய்த் தீர்த்து வைப்பதோடு பதினைந்து ஸமஸ்தானங்களின் சைன்யங்களை தங்கள் ஆதீனத்தில் வைத்துக்கொள்வதும் தன் அங்கத்தினர்கள் தேசங்களின் உள்நாட்டு காரியங்களிலும் ஒரு பார்வை வைத்துக்கொள்வதும் அதன் கடமையாகவிருந்தது.

ஐரோப்பிய போலீஸ் படை.

பிரிடன், பிரான்ஸ், ஜெர்மனி, ஸ்பெயின், டென்மார்க்கு, ஸ்வீடன், போலாந்து, ஹங்கேரி, முதலிய தேசங்கள் சேர்ந்த 15 தேசங்களும் லக்ஷம் காலாட்படை, 25,000, குதிரை வீரர்கள் 120 பீரங்கிகளுள்ள ஒரு பொது ஐரோப்பிய போலீஸ் படைக்கு ஈவு கொடுக்க வேண்டியது.

ஹென்ரியின் சரித்திராசிரியர் சொன்னது போல் "கிறிஸ்துவ தேசங்களிலுள்ள எல்லா நல்லாசிரியர்களையும் ஹென்ரி தன் பக்கம் சேர்த்துகொண்டார். ஏனெனில் ஜனங்களைக்கட்டாயப் படுத்துவதைக் காட்டிலும் அவர்களை நல்ல வார்த்தைகளால் திருப்புவதால் ஜனங்களே தண்டோபாயங்கள் கடைசியாகப் பிரயோகிப்பதற்காகப் பத்திரப் படுத்தி வைக்கப்பட்டதே ஒழிய வேறு அல்ல வென்று திருப்தியடைந்து, ஹென்ரியினுடைய நல்லெண்ணங்களைத் தெரிந்துகொள்ள வேணுமென்று விரும்பினர்."

உண்மையான இப்பெரிய ஏற்பாட்டை ஹிட்லர் எப்போதாவது கேள்விப்பட்டிருந்தால், அதன் முக்கியமான இரண்டு அம்சங்களை ஹிட்லர் அறிந்துகொள்ளவில்லை அல்லது நிராகரித்துவிட்டான்போலும். முதலாவது வலிமைக்கு முன் செம்மையே பெரிது என்பது. தண்டோபாயமானது நியாயத்தையும், சட்டத்தையும் நிலை நிறுத்துவதற்காக கடைசி பக்ஷமாகத்தான் பிரயோகப்படுத்த வேண்டியது என்பது இரண்டாவது அமிசம். ஹிட்லர் பிரஷியா நாட்டுக் கொள்கையான பலவானே பெரியவன் என்ற கொள்கையையும், தானே வெகு உரக்கப் பகிரங்கப்படுத்துகிற கொள்கையாகிற: "உலகத்தில் ஜெர்மன் ஆதிக்கம் ஓங்குவதற்கு தலைகால் தெரியாது மூர்க்கத்தனமாக ஒவ்வொரு காரியத்தையும் செய்யவேண்டு"மென்பதையும் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவந்தான்.

ஹிட்லரிடம் பிடித்துக்கொடுக்கப்பட்டது.

இப்பொழுது அடிமைத்தனத்துக்குத் தங்கள் தலைவர்களால் கொண்டுவிடப்பட்ட ஹங்கேரிதேசத்து ஜனங்கள் தங்கள் முன் காலத்துப் பெரிய தலைவர்களின் பெருமையையும், தற்பொழுது உள்ள தலைவர்களின் சிறுமையையும் கவனிக்குங்கால் மிகவும் வருந்துவார்கள் என்பதில் ஐயமில்லை. அந்த தேசத்துத் தலைநகரான ப்யூடாபெஸ்ட் என்ற நகரில், "ஆணை யெடுத்த சவுக்" என்ற ஒரு பொது வெளி ஒன்று இருக்கிறது. இந்த சவுக்கில்தான் 1848-ம் வருஷத்தில் மாக்கியர்கள் என்ற ஜாதியார் இனி ஆஸ்ட்ரோ-ஜெர்மானியரான "ஹாப்ஸ்பர்க்கு" என்ற ராஜ வம்சத்துக்கு அடிமைகளாக மாட்டோம்

என்றும், ஸுதந்திரத்தையடைவோம் என்றும் ஆணைசெய்து கொண்டார்கள். அதை ஒரு கவி பாடியிருக்கிருர்.

"மாக்கியார் தெய்வத்தின்மேல்
ஆணை செய்திட்டோம்
ஆம், ஆணை செய்திட்டோம், மேலும்
ஆணை செய்திட்டோம்
நாம் அடிமைகள் ஒருபோதும்
இனிமேல் இல்லை."

அந்த ஆணை இப்பொழுது தவறி விட்டது. ஏனெனில், ஹாப்ஸ்பர்க் ராஜ வம்சத்தைச்சேர்ந்தவர்களெல்லாரைக்காட்டிலும் க்ரூரமான ஒரு ஆஸ்திரிய ஜெர்மானியனிடம் பிரதம மந்திரியும், அயல்நாட்டு காரியதரிசியும் தேசத்தை ஒப்புவித்துவிட்டார்கள். அதற்கு கைமேல்கிடைத்த வெகுமதி என்னவென்ருல் குறைவானமதிப்புள்ள ஜெர்மன் நாணயமான "மார்க்கு"க்குக் சமமாக ஹங்கேரியின் நாணய மதிப்பும் குறைக்கப்பட்டதுதான்.

பொது ஐரோப்பிய நோக்கத்தைக் கொண்டு கவனித்தால், அச்சுடன் ஹங்கேரி சேர்ந்தது. பொருட்படுத்த வேண்டிய விஷயமில்லை. இருந்தாலும், ஹங்கேரியின் அடுத்த தேசமான யுகோஸ்லாவியாவிற்கு அது பெரிய விஷயம்தான்.

இதாலியின் துக்க சம்பவங்கள்.

கூடிய சீக்கிரத்தில் இந்த பெரிய ஏற்பாடாவது சமாதான இயக்கமாவது வெற்றி பெறும் என்று ஹிட்லர் எதிர்பார்க்கிருன் என்று நான் நினைக்கவில்லை. கிரீஸின்பேரில் இதாலி எடுத்த படையெடுப்பில் இதாலிக்கு ஏற்பட்டுள்ள துக்க சம்பவங்களால், மத்திய கீழ்ப் பிரதேசத்தில் இல்லாவிடினும் பால்கன்களில் ஒரு படையெடுப்பை ஹிட்லர் கூடிய சீக்கிரம் துவக்கும்படி நேரிடலாம்.

தள்ளினவன் மேல் பழி சொல்லுவதற்காக நினைத்துச் சமாதானத்துக்கு அழைப்பது ஒரு தந்திரமான வேலை என்று அவன் நினைக்கலாம். இதுபோல் முஸோலினி ஏற்கனவேதான் பாஸிஸ்டு கக்ஷிக்கு சொற்பொழிவு நிகழ்த்தும்போதே சொல்லியிருக்கிருன். "இந்த யுத்தத்தின் பொறுப்பு பிரிடன்பேரில் தான் என்று நிர்ணயமாக இன்றும் என்றும் யாவராலும் மறுதளிக்க முடியாமலும் உறுதியாகவும் பிரமாணமாகவும் சொல்லுகிறேன். ஹிட்லருடைய அழைப்புகளை பிரிடன் ஏற்றுக் கொண்டிருந்தால், அமைதி உண்டாகியிருக்கும்."

இவ்வாறு முஸோலினி சொன்ன காலத்தில் அவன் ஹிட்லருக்குப் பக்கவாத்தியம் வாசித்தான். இதாலியைத் தொங்கலில் விட்டுவிடக்கூடாதென்று ஹிட்லரிடம் கெஞ்சிகொண்டிருந்தான். ஹிட்லர், அவனைப் பொறுத்தமட்டில், முஸோலினியை இழிவாக நினைக்கிருன். ஆனல், அவனை துலைத்துக் கைகழுவ முடியவில்லை. முஸோலினியின் சௌரியத்துக்கு, அவனுக்கு விழுந்த முஷ்டியடியில் அவனுடைய கண் கரு ரத்தம் கட்டிப்போனதில் ஹிட்லருக்கு அவ்வளவு வருத்தமில்லாவிடினும், 'கோரிட்ஸாவில் வீர கிரேக்கர்களிடம் முஸோலினி வாங்கிக்கொண்ட அடியில் இவ்வளவு கரு ரத்தங்கட்டிப்போய் விடவேணும் என்று ஹிட்லர் நினைத்திருக்கமாட்டான்.

ஸ்வேச்சாதிகாரிகளும் வீஷியும்.

ஐரோப்பாவில் ஜெர்மனியின் புதிய திட்டத்திற்கு மார்ஷல் பெடேனையும் அவருடைய வீஷி ஸர்க்காரையும் ஒழுங்குப்படுத்திக்கொண்டுவர

ஹிட்லர் பிரயத்தனப்பட்டுக்கொண்டி ருக்கும் சமயத்தில் பிரான்ஸ் தேசத் துக்குப்பாதகமாக இதாலிக்குப்பிரஞ்சு தேசங்கள்வேண்டுமென்று முஸோலினி வற்புறுத்தியதால் ஹிட்லர் அவனிடம் கசந்துபோய்விட்டான். இப்பொழுது இங்கிலாந்தின் உதவியால் கிரிஸுக்கு முஸோலினி பேரில் பெற்றிருக்கும் வெற்றியிலிருந்து முஸோலினியை ஹிட்லர் மீட்கவேணுமென்றால், இதாலி கண்ணை மூடி வாயைத் திறந்து கொண்டு, ஹிட்லர் கருணையுடனளிக் கும் பிரதேசங்களை நன்றியுடன் பெற்றுக்கொள்ள வேண்டியதுதான். அப்பொழுது வீஷிஸர்க்கார் ஹிட்லர் சொன்னபடி கேட்பார்கள்.

மத்தியில் வீஷி ஆஸாமிகளுக்குக் கொஞ்சம் கடுக்காய் கொடுப்பது போலும், அவர்கள் ஹிட்லருடைய கட்டையே நினைத்திருக்கக்கூடாதென் றும் காண்பிப்பதற்காகப் போலும், 'லொரைன்' என்ற பிரஞ்சு பிரதேசத் திலிருந்து ஆயிரக்கணக்கான பிரஞ்சுக் காரரையும் அவர்களுடைய குடும்பங் களையும் வெளியே துரத்திவிட்டான். இந்த வீஷி ஆஸாமிகளுக்கு தங்கள் எஜமான் யார் என்று ஞாபகமூட்ட சாட்டையின் ஒரு சுண்டு அல்லது அதன் ஒரு அடி போதுமென்று ஹிட்லர் ஸந்தேகமின்றி நினைக்கிறான்.

எல்லாவற்றையும் கவனிக்க, ஹிட்லர் பூட்டி ஒட்டும் கூட்டங்கள் சாதுவாகப் போகும் கூட்டமல்லவென்று தெரி கிறது. உண்மையில் இதாலியர்கள் யுத்தத்தை வரவேற்றார்களானால், முஸோலினியின் சொற்பொழிவு அவர் பயந்து செய்ததாக அறிந்திருப்பார்.

முஸோலினியை எவ்வாறு உதவி செய்வது

ஆயினும் முஸோலினிக்கு எவ்வாறு இப்பொழுது நன்றாக உதவி செய்வது என்பது தான் ஹிட்லருடைய பிரச்னை. ஜெர்மானிய துருப்புகளைக் கடல்வழியே அனுப்புவதென்பதை நினைக்கவே முடி யாது. பல்கேரியா மூலம் தங்கு தடையில்லாமல் ஜெர்மானியத் துருப்பு கள் கிரீஸைத் தாக்கப் போவதாயிருந் தாலும், துருக்கி சும்மாவிருக்குமா?

துருக்கியர் இருக்கும் இடத்தை விட்டு நகரமுடியாதபடி அவர்களை அமுக்குவதற்கு ருஷியா ஒப்புக் கொண்டு விட்டதா? நமக்கு இன்னம் தெரியவில்லை. ஹிட்லருக்கு தெரியு மோ என்னமோ தெரியவில்லை. துருக்கி உறுதியாக நின்றால் கிரேக்கரின் வீர்யம் யுகோஸ்லாவியாவிற்கு தைரியமளித்து ஹிட்லரை எதிர்க்கச் செய்யும். மலை களுக்கு மத்தியில் யுகோஸ்லாவியர்கள், சண்டையிடுவதில் சமர்த்தர்கள்.

இக் கேள்விகளுக்கு வருங்காலம் சீக்கிரம் பதிலளிக்கும். மேற்படி பதி லும் இப்பொழுது பயந்திருக்கும் நாடு கள் ஹிட்லரைப் பிரிடன் ஜெயிக்கமுடி யும் என்ற நம்பிக்கையைப் பொறுத்த தாகயிருக்கிறது.

பிரிடன் ஜெயிக்காமலிருப்பதோடு, இங்கிலாந்தின்மேல் போடும் ஒவ்வொரு விமான வீச்சையும் பிரிடன் வட்டி யுடன் திருப்பி கொடுக்கும்வரை, ஹிட்லர் ஜயிக்கப்பட முடியாதவன் என்ற நம்பிக்கை குறைந்துகொண்டே வரும் அவன் இந்த அமைதி இயக் கத்தை ஆரம்பித்து பெரிய ஏற்பாட்டை அமைக்கப் பிரயத்தனப்படும்போதெல் லாம், அவன் தற்காப்பிலேயே இருக் கும்படி விரட்டப்படுகிறானென்பது அவனுக்கோ தெரியும். இன்னும் சில மாதங்கள் ஆவதற்குமுன் இந்த விஷ யம் உலகம் பூராவும் தெரிந்துவிடும்.

அவன் கணக்கு ஒப்புவிக்கும் நாள்.

மத்தியகாலத்தில் பிரிடனில் நாம் நிர்வகித்துக் கொண்டிருக்கிறோம். திருப்பியடித்துத் திறனை மறுபடியடைகிறோம், 1941-ம் வருஷத்தில் உதயமாகப் போகும் கணக்கு ஒப்புவிக்கும் நாளை பிரதீக்ஷிக்கிறோம். நாம் இன்னும் நம்முடைய பெரிய ஏற்பாட்டை இன்னும் அமைத்து வெளியிடவில்லையென்பது ஏனென்றால், நாம் போர் செய்து கொண்டிருக்கிறோம், பேசிக் கொண்டிருக்கவில்லை. எதற்காகப்போர் என்றால் ஐரோப்பிய ஸ்வதந்திரத்திற்காகவும் உலகத்தின் பெரும்பாகத்தின் ஸ்வதந்திரத்திற்காகவும்.

முதல் காரியங்கள் முதலில் வரும். நாம் சொன்ன வாக்குறுதிகளை நாம் நிறைவேற்றுமலிருப்பதைக்காட்டிலும், நாம் நம் வாய்போக்கை தாமதம் செய்து கொடுப்பது நலம்.

நம் ஏற்பாடு நம் மனதிலும் உள்ளத்திலும் வளர்ந்து கொண்டிருக்கிறது. நான்காவது ஹென்ரியும், ஸல்லி பிரபுவும் போல நாமும் இரண்டு கொள்கைகளை மனதில் கொண்டிருக்கிறோம். வலிமைக்கு முன் செம்மையே முற்படவேண்டும். யுத்தமென்ற சாபத்தை ஒழிக்கச் சட்டத்தின் ஸேவகனுக தண்டோபாயம் கடைசியாகப் பிரயோகமாவதே அதன் கிரமமான தொழில்.

ஒரு தீர்க்கதரிசி கௌரவிக்கப்படாமல் இருக்கமாட்டார்.

(திரு. ஸ்டீபன்ஹால் என்பவருடைய 7—11—40உ யுள்ள 226-ந. செய்திக் கடிதம் திருபிக்கிறபடி.)

சென்ற யுத்தத்தில் அடியிற்கண்ட விஷயங்களால் பிரிடிஷ் கடற்படைக்கு நன்மை பயந்தது :—

(*a*) டோவர் ஜலஸந்தியை நீர்மூழ்கிக் கப்பல்கள் கடக்க முடியாமல் செய்துவிட்டார்கள். அதனால் ஜெர்மானிய நீர்மூழ்கிகள் அட்லாண்டிக் மகாஸமுத்திரத்தில் வேலை செய்ய பிரிடிஷ் தீவுகளை வடபக்கமாகத் தாண்டிச் செல்லவேண்டி நேரிட்டு, காலமும் எண்ணெயும் செலவிடவேண்டியதாயிற்று.

(*b*) இதாலியக் கடற்படையும், பிரெஞ்சுக் கடற்படையும் நம்முடைய பக்கம் இருந்தன.

(*c*) 1917-1918-வரை மகாஸமுத்திரங்களில் போகவல்ல ஜெர்மானியரின் பெரிய நீர்மூழ்கிகள் செய்யப்படவில்லை.

(*d*) தென் அயர்லாந்து துறைமுகங்களும், அட்லாண்டிக் ஸமுத்திரத்திலுள்ள பிரெஞ்சு துறைமுகங்களும் நம் பாரா கப்பல்களுக்கும் நீர்மூழ்கி எதிர்ப்பு காலங்களுக்கும் முன்ஸ்தாபனங்களாயிருந்தன.

இன்று நாம் அடியிற்கண்ட விஷயங்களை அறியவேண்டும்.

(*a*) டோவர் ஜலஸந்தி திறந்திருக்கின்றது. ஜெர்மன் நீர்மூழ்கிகள் பிரெஞ்சு துறைமுகங்களை உபயோகப்படுத்த இயலுகின்றன.

(*b*) இதாலிய நீர்மூழ்கிகள் நமக்கு விரோதிகளாகயிருக்கின்றன.

(*c*) நாம் அயர்லாந்து துறைமுகங்களை உபயோகப்படுத்த முடியவில்லை. பிரெஞ்சுக் கடற்படை பெரும்பாலாக நமக்கு உபயோகமில்லை.

இந்தக் காரணங்களாலும் இன்னும் சில காரணங்களாலும் ஜெர்மன் நீர்மூழ்கி கப்பல்கள் வெகுதூரங்களிலுள்ள நம் கப்பல்களைத்தாக்கும் என்று நாம் எதிர் பார்க்கவேணும். இந்த நீர்மூழ்கிகளுக்குக் கட்டாயம் ஏற்படும் காலங்களில் தண்ணீரில் மூழ்கிவிடும், ஆனால் ஜலப் பரப்புக்கு எழுந்து நம்முடைய வியாபாரத்தையும், ஸரபராக்களையும், பீரங்கிகளால் தாக்க எண்ணத்துடனிருக்கின்றன. அதற்கு ஒத்துமையாக ஜெர்மானிய கப்பல்களும் விமானங்களும் நடமாடுகின்றன. ஜெர்மானிய விமானமும், நீர்மூழ்கிகளும் தந்திரமாக ஒத்துழைத்ததால் "எம்பிரஸ் ஆப் பிரிடன்" என்ற கப்பல் மூழ்கடிக்கப்பட்டதென்பதை ஒரு உதாரணமாகக் கொள்ளலாம்.

இந்த அபாயத்துக்கு நாம் செய்யும் பிரதி என்னவென்றால்: வெகுகாலம் வெகுதூரம் கஷ்டங்களைப் பொறுக்கவல்ல பாரா கப்பல்களைச் செய்வது நீர் மூழ்கிகளைத் தாக்க வன்மையுள்ளதும் வெகுதூரம் போய் உளவறியக்கூடியதுமான கடல் விமானங்களை இன்னும் அதிகமாகச் செய்வதும்; ஐக்கிய ஸமஸ்தானங்கள் தங்களுக்கு முடிந்த மட்டும் நமக்கு அவர்களுடைய கடற்படையிலிருந்து கொடுத்துதவுவதும், நம் வியாபாரக் கப்பல்களில் இன்னும் அதிகமான பீரங்கிகளை ஸ்தாபிப்பதும், நம் நஷ்டங்களை ஈடுசெய்ய ஜாஸ்தி வியாபாரக் கப்பல்களைச் செய்வதும்; இறக்குமதியாகவேண்டிய சரக்குகளை எவ்வளவு குறைத்துக்கொள்ள முடியுமோ அதற்கு அநுஸரணையாக உள்ளூரில் சிக்கனங்களைச் செய்வதும், நீர்மூழ்கிகள் கிளம்பும் ஸ்தாபனங்களை நம் பாரா கப்பல்கள் தாக்குவதில் மறுபடி பிரிட்டனுக்குத் திரும்பி வந்து நிலக்கரி போட்டுக்கொண்டு போகிற சிரமமில்லாமலிருக்கும்படி பாரா கப்பல்கள் தங்கக்கூடிய துறைமுகங்களை ஏற்படுத்திக் கொள்வதுமே.

நாம் இத்தாலி பேரில் எடுத்துக்கொண்டிருக்கும் படையெடுப்பு நடவடிக்கைகளுக்குத் தற்பொழுது இதாலி கிரீஸைத் தாக்குதலும் ஸாதகமாகவேயிருக்கும். நாம் போரிடவேண்டிய இரண்டு அரசுகளுக்குள் பலஹீனமுள்ள இத்தாலி ராஜ்யத்தின் பேரில்தான் நம்முடைய எதிர்ப்பை ஏகோபிக்கவேண்டும் என்பது தான் சரியான யுத்த தந்திரம் என்று இந்த செய்தி கடிதங்களில் எப்பொழுதும் வற்புறுத்தி வந்திருக்கிறோம். இதாலி தேசம் அநேகமாய்த் தீவுதான். வடக்கே ஆல்ப்ஸ்மலை என்ற பெரிய இடையூறிற்கிடையேயுள்ள சில கணவாய்கள் வழியாகவும், மலைதுவாரங்கள் வழியாகவும்தான் தன்னுடைய பெரிய கூட்டாளியுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. அதன் தொழிலாதாரங்கள் எல்லாம் வடக்கே குவிந்திருக்கின்றன. அதன் போக்குவரவு சாதனங்கள் கடற்கரையோரமாக

இருக்கின்றன. அதன் எண்ணெய்ச் சேகரங்களும், உலோகங்களும், சில உணவுப்பொருள்களும் செலவழிக்கப்பட்டால் அது ஹிட்லருக்கு ஒரு பெரிய பாரமாக ஆகிவிடும். அதனால் இதாலியை நாம் அழுத்தமாகவும், தளராமலும் தாக்கவேண்டும். இப்பொழுது நம்முடைய கபபல்களும், விமானங்களும் கிரேக்க பிரதேசத்தை நடவடிக்கை ஸ்தானங்களாகக்கொள்ள இயலுவதால் முன்னிருந்ததைக் காட்டிலும் தற்சமயம் இதாலிக்கு நானூறு மைல்களுக்கு அருகே இருக்கக்கூடிய வசதி ஏற்பட்டிருக்கிறது. நம் புதிய தூரவீச்சு வெடி விமானங்கள் வேலைசெய்ய ஆரம்பித்தால், முஸோலினி இதாலியர்களுடைய வாழ்க்கைகளை ஹிட்லருடைய மஹத்தான ஆசைகளுக்கு அர்ப்பணம் செய்ததை நினைத்து இதாலியர்கள் வருந்துவார்கள்.

குறிப்பு :—பிரிடிஷ் ஸர்க்காரும் இதுபோலவே நினைத்து வந்திருக்கிறார்கள். சொல்ப நாட்களுக்குமுன் டாரன்டோ வளைகுடாவிலும், மத்தியதரைக் கடல் வெளிகளிலும் நடந்த சம்பவங்கள் இதை ருஜூப்பிக்கின்றன.

சற்று முன்வரை இத்தாலிபேரில் எடுத்துக்கொள்ளப்பட்ட விமான நடவடிக்கைகளும் பரீக்ஷார்த்தமாக இருந்தன. அதிகதூரம் செல்லவேண்டிய விஷயமும், ஜெர்மன் விமானப்படைக்கு ஜீவாதாரங்களைத் தாக்கி, அப்படை பிரிடனைத் தாக்காமல் தடுக்கவேண்டிய விஷயமும் இதுவரை இதாலிக்குச் சற்று சாவகாசம் அளித்தது. ஆனால் இந்த ஸாவகாசம் இப்போது சீக்கிரம் குன்றிவிடும். வெகுகாலம் வெகு மும்முறமான வெடி வீச்சுகளை இதாலியப் பொறுமையும் எவ்வளவு தாங்கும் என்று கவனிக்க ஸுவாரஸ்யமாகயிருக்கும்.

இதாலி தன் பலக்குறைவைக் காட்டினால், ஜெர்மானியர் "பிரன்னர்" கணவாய் வழியாக வந்து, தேசத்தை வியாபித்தே விடுவார்கள். இந்த ஸம்பவமும் இதாலியில் ஒரு யுத்தத்தைத் துவக்கும். அதுதான் நாஸிகளை எதிர்க்கும் ஐரோப்பிய கிளர்ச்சியின் துவக்கமாகும். நாம் இதாலியரைத்தாக்க மற்றொரு காரணமுமுண்டு—அதாவது அதனால் நாம் லக்ஷக்கணக்கான பிரெஞ்சுக்காரருக்கு அளிக்கும் அளவிலாக்களிப்பே. ஜெர்மானியரால் தோற்கடிக்கப்பட்டது பிரெஞ்சுக்காரர் அறியக்கூடிய ஒரு விஷயம்தான். ஆனால் இதாலியருக்கு பிரெஞ்சு பிரதேசத்தை கொடுக்கவேண்டி வந்ததைப்பற்றி அவர்கள் ஸமாதானப் படுத்திக்கொள்ள முடியவில்லை. மேலும் இதாலியில் முஸோலினிக்கு எதிராகக் கலகம் ஏற்பட்டால் பிரெஞ்சு ஸமுதாயிகளும் இதாலிய கலகக்காரர்களுடன் சேர்ந்து கொள்வதில் கஷ்டமிராது. மேலும் நம்முடைய எதிரிகளுடன் ஸ்பெயின் சேர்ந்து கொள்ளும் முட்டாள் தைரியம் கொண்டால், இஸ்பானிய குடியரசு கக்ஷிக்காரரும் சேர்ந்துகொள்ளுவார்கள். லதீன் பாஷை பேசும் நாஸியின் சத்துருக்களும் பாஸிஸ்டின் சத்துருக்களும் சேருவதைக் காட்டிலும் பிரெஞ்சு, இதாலிய, இஸ்பானிய பிரதி-நாஸிகள் ஒத்துழைப்பது எளிது. பிரெஞ்சு மந்திரி திரு லவால் என்பவர் கொண்டிருக்கும் "லத்தீன் கூட்டம்" என்ற கனவும் உண்மையாகலாம். ஆனால் அது அவருடைய உத்தியோகத்தையே சந்தேகமாகச் செய்யக்கூடிய வேறு விதத்தில் ஏற்படும் என்று தோன்றுகிறது.

கிரேக்க யுத்தமும் பால்கனில் அச்சு நாடுகளின் சூழ்ச்சிகளும்.

பல்கேரியா ஒப்பந்தத்தில் சேர மறுதளித்தது,

துருக்கியின் எச்சரிப்பின் பலன்.

ரஷியாவின் அறிக்கை.

டெயிலி டெலக்ராப்பின் ராஜதந்திர நிருபர் எழுதுகிறார்.

ஹங்கேரியும், ருமேனியாவும், ஸ்லவேகியாவும் சம்மதித்து அச்சு நாடுகளாகிய ஜெர்மனி, இதாலி, ஜப்பான் இவர்களுடைய மூவர் உடன்படிக்கையில் சேர்ந்துகொண்டதுபோல பல்கேரியா மேற்படி அச்சுநாடுகளோடு சேர்ந்து கொள்ள மறுத்துவிட்டதிலிருந்து, பால்கன் நாடுகளில் ஹிட்லர் எண்ணம் கொண்ட சூழ்ச்சிகளெல்லாம், கிரீஸ் தேசத்தில் முஸோலினி பிரவேசித்து மிகுந்த நஷ்டத்துடன் வந்ததால், தலைகீழாய்க் கவிழ்ந்துவிட்டதென்பதை நன்றாய் வற்புறுத்திக்காட்டுகிறது.

வில்ஹெல்ம் ஸ்ட்ராஸியிலிருந்து தகவல்கிடைத்த அளவில் பல்கேரியா உடன்படிக்கையை ஒப்புக்கொண்டுவிடும் என்று பெர்லினிலிருந்து வந்த செய்திகளுக்குப் பின்பற்றியே பல்கேரியா மறுத்துவிட்டதென்பது ஐரோப்பாவில் ஜெர்மனியின் ராஜதந்திரம் நிலைகுலைந்து விட்டதென்பதற்கு ஒரு அடையாளம்.

நவம்பர் 26 பிற்பகல் வரையிலும் பெர்லினிலிருந்து வந்த செய்திகளில் இந்த வாரத்தில் அச்சுநாடுகளோடு பல்கேரியா ஒப்பந்தம் செய்துவிடுமென்று அறிவித்ததாக டெயிலி டெலக்ராபின் ஹெல்ஸிங்கி நிருபர் எழுதுகிறார்.

இதே சமயத்தில் நாஸி பத்திரிகைகள், ஜெர்மனியின் ராணுவப்படை மத்திய தரைக்கடல் பிரதேசத்தில் தன்னுடைய பராக்கிரமத்தை வெளிக்காட்டுமென்று உறுமுகிறது.

டெயிலி டெலக்ராபின் பெல்க்ரேட் நிருபர் எழுதுகிறதாவது. கோரிட்ஸாவை கிரேக்கர்கள் கைப்பற்றியது ஸோபையாவிலுள்ள நாஸிகள் கக்ஷியின் சார்பாகவிருப்பவர்களின் மனதைக்கவர்ந்தது. அமித கக்ஷிக்காரர்கள் அச்சு வல்லரசர்களுடைய நட்பை அங்கீகாரம் செய்ய சிபார்சுசெய்ய ஆலோசனை செய்கிறார்கள்.

கிரேக்க ராணுவப்படையின் தீரச்செய்கையும், வாக்குக் கொடுத்தபடி கிரீஸின் ஒத்தாசைக்கு பிரிடன் உடன்காலத்தில் சென்றதும் தவிர, பல்கேரியாவின் தீர்மானத்திற்கு துருக்கியின் சந்தேகமற்ற எச்சரிக்கையும்தான் முக்கிய காரணங்கள் அதாவது:—ஈஜியன் கடற்கரையில் யுத்த நிலயங்கள் ஏற்படுத்துவதற்காக உத்தேசத்துடன் கிரீஸ் தேசத்தில் பல்கேரியா பிரவேசித்தால் கிழக்கேயிருந்து பல்கேரியாவுக்குள் துருககி உட்புகும்படி நேரிடும் என்பது தான்.

இந்த எச்சரிக்கையை பலப்படுத்திக் கடுமையான சொற்பொழிவுடன் பால்கன் நாடுகளில் யுத்தத்தைப் பரவும்படி செய்ய யுத்தத்தில் இரங்கக்கூடாதென்று பல்கேரியாவுக்கு ரஷியாவிலிருந்து செய்தி வந்திருப்பதாகத் தெரிய வருகிறது. பல்கேரியாவிலுள்ள ஜனஸமூகமானது ரஷியாவின் வார்த்தைகளை பொருட்படுத்தும்.

சென்ற மாதம் 26-ம் தேதி போரிஸ் மன்னர் ரஷியாவின் பர இலாகா ஆபீஸ் பிரதான காரியதரிசியாகிய எம். ஸோபாலப் என்பவரை வரவேற்றுப் பேசினர். ஸோபாலப் டான்யூப் மகா நாட்டிற்கு விமான மார்க்கமாய் போகும் வழியில் 24-ம் தேதி ஸோபையாவிலிரங்கினர்.

எம். ஸோபாலப்புடன் பல்கேரியாவிலுள்ள ரஷியாஸ்தானிகரான எம். லாரண்டியப்பும் சென்ருர். இவ்விருவர்களும் பல்கேரியா பிரதான மந்திரியாகிய எம். பிலாப்போடும், பர இலாகா மந்திரியான எம். பாப்பாப்பியோடும் ஏற்கனவே கலந்து பேசிவிட்டார்கள்.

பெர்லினிலிருந்து பல்கேரியா மந்திரியான எம். ட்ராகனூப், பல்கேரியாவுக்குத்திரும்பி வந்திருக்கிருர். அவரை ஒரு ரிபோர்ட்டு அனுப்பும்படி உத்தரவிட்டிருக்கிருர்கள்,

ஆப்டன்ப்ளாடட் என்னும் ஸ்டாக்ஹோம் பத்திரிகையின் பெர்லின் நிருபர் இதாலியின் தோல்வியினல் விளைந்த மற்றெரு பலனைப்பற்றி எழுதியிருக்கிருர். அச்சுநாடுகளைப்பற்றி ஸ்பெயினின் அபிப்பிராயமானது நிச்சயமாய் குறைவு அடைந்திருக்கிறதென்று அறிவிக்கிறது.

இந்தப் பின்போக்கு வாஸ்தவமென்று 26-ம் தேதியன்று பெர்லினிலுள்ள உத்தியோகஸ்தர்கள் ஒப்புக்கொள்ளுகிருர்கள், நாஸிகளின் வழக்கப்படி வெற்றி முழக்கத்தோடும் ஆரவாரத்தோடும் அறிவித்தபடி பெர்லின் நகரத்திற்கு எம். பிலாப்பும், எம். பாப்பாப்பும் ஏன் வரவில்லையென்று ப்ரசனை கிளம்பியபொழுது, அவர்கள் சங்கடப்பட்டார்கள்.

அவர்கள் ஒருவாறு தைரியப்படுத்திக்கொண்டு கலக்கமன்னியில் சொன்னதாவது—பல்கேரியாவின் ராஜதந்திரிகள் கூடிய சீக்கிரம் பெர்லினுக்கு வரப் போகிருர்களென்று வெளிவந்த சமாசாரங்களெல்லாம் அன்னிய தேசத்திலிருந்து கிளம்பியவைகள். ஆனல் அவர்கள் ஜெர்மனி, இதாலி, இவைகளின் ஒலிபரப்பு நிலயங்களிலிருந்து மேற்படியார்களின் வரப்போகும் விஜயத்தைப்பற்றி ஏற்கனவே ஒலிபரப்பப்பட்டிருக்கின்றன என்பதை மறந்துவிட்டார்கள் போலும்.

பல்கேரியாவின் மறுதளிப்பிலிருந்து ஹிட்லருக்கு மிகவும் அசௌகர்யம் ஏற்பட்டிருக்கவேண்டும். முஸோலினியின் தோல்வியை சீர்திருத்தவேண்டி ஹிட்லர் தன் ராணுவபலத்தை உபயோகப்படுத்த ஆரம்பித்தால் ஐரோப்பாவில் தான் செய்ய நினைத்த ஏற்பாட்டின் ஒருபாகமான பால்கன் நாடுகளின் உணவுப் பொருள்கள் வகையராவைக் கொள்ளையடிப்பது என்ற எண்ணத்துக்கு அபாயம் விளைவிக்கும்படி நேரிடும்.

மேலும் ஹிட்லர் ஜாக்கிரதையாகத் தன்னுடைய புஸ்தகங்களில் நிந்தனை செய்திருக்கிற சென்ற மஹா யுத்தத்தில் ஜெர்மனி செய்த தவறுதலை மறுபடியும் செய்து கிழக்கேயும் மேற்கேயும் போர்முனைகளில் ஒரே சமயத்தில் சண்டை செய்யும்படியான அவஸ்தையில் அகப்பட்டுக்கொள்ள நேரிடும்.

ரிப்பன்ட்ராப், சியானே, வான் பேபன், இவர்களின் சந்திப்பு.

இஸ்டான்புல்லில் (துருக்கி தேசத்தின் தலைநகரம்) மேற்படி சந்திப்பை எவ்விதம் நோக்குகிறார்கள்.

ஜெர்மனி, கிரீஸ் தேசத்தைத் தாக்குமா?

துருக்கியும் பல்கேரியாவும் போரில் கலக்க நேரிடும்.

இரண்டு வாரங்களுக்கு முன், இஸ்டான்புல்லில் இருக்கும் 'ந்யூஸ்க்ரானிக்கிள்' பத்திரிகையின் நிருபர், அடியிற்கண்டவாறு ஒரு தந்தி கொடுத்தார்.

"அச்சுநாட்டு அன்ய இலாகா மந்திரிகள், ரிப்பன்ட்ராப், சியானே, துருக்கியில் இருக்கும் ஜெர்மனி தேசப்ரதிநிதி வான்பேபன், ஆகிய இம்மூவர்களும், ஜெர்மனியில் ஒரு ரகஸ்யக்கூட்டம் கூடினது, துருக்கியில் பரவி, துருக்கர்களும், அதைப்பற்றிச் சிந்திக்கலாயினர்.

தென்மேற்கு ஐரோப்பாவிலும், சண்டையில் ஜெர்மனி கலந்துகொள்வதைப் பற்றி தீர்மானிப்பதற்காகத்தான் மேற்படி கூட்டம் கூடினது என்று நன்கு விளங்குகிறது. துருக்கியிலுள்ள அறிஞர்களும், சந்திப்பில் சேர்ந்த மூன்று நபர்களுடைய நிலைமையும் அடியிற்கண்டவாறு என்று கண்டார்கள். முதலாவதாக, பால்கன் நாடுகளில், போர்புரிந்து எந்த வழியிலும், சிலவைப் பாராட்டாமல், கடைசிவரையில் பார்த்துவிட வேண்டுமென்பது சியானேவின் அபிப்பிராயம்; வான்பேபன் அவர்களோ, எந்தப்பிரகாரமும், பால்கன் நாடுகளில் அமைதி இருக்கவேண்டும் அதற்கு யாதொரு பங்கமும் நேரிடக்கூடாது என்கிற தீவிரபுத்தி கொண்டவர்; ரிப்பன்ட்ராப் இவ்விருவர்களுக்குள் மத்யஸ்தராக இருந்து, தீர்மானம் செய்யச் சேர்ந்துகொண்டார்.

இதாலியர்கள் ஏகாங்கியாக கிரீஸ் தேசத்தை எதிர்த்து ஜயிக்க முடியாது என்பதை உணர்ந்தே, ஜெர்மானியர்களுடைய ஒத்தாசையை சம்பாதிக்க வேண்டியேதான், சியானோ மேற்படி கூட்டத்திற்கு வந்திருக்கிறார்.

ஆனால், வான்பேபன், துருக்கியிலிருந்து பல கடிதங்கள் மூலம் ஜெர்மன் கவர்ன்மெண்டாரை, பால்கன் நாடு ப்ரச்னையில் கலந்துகொள்ளக் கூடாது என்று கண்டிப்பாய் எச்சரிக்கை செய்துவந்ததால், ஹிட்லரும், இருவரையும் நேரே வரவழைத்து, அவர்களைக் கேட்டுத்தான், ஒரு தீர்மானத்திற்கு வர வேண்டுமென்று முடிவு செய்தார்.

வான்பேபனுடைய அபிப்பிராயம் அடியிற்கண்டவாறு என்று கருதப் படுகிறது :—பல்கேரியாவின் ஒத்துமந்தின் பேரில்தான் ஜெர்மனி இதாலியர்களுக்கு ஒத்தாசை கொடுக்கலாம்; அப்படி ஏற்பட்டால், அதாவது பல்கேரியா சண்டையில் சேர்ந்துகொண்டால், துருக்கியும் சேரும்.

பொருளாதார நெருக்கடியினாலும், ஸமரஸ பேச்சுகளாலும்தான் துருக்கியை ஜயிக்கவேண்டும் என்பது வான்பேபனுடைய இச்சை. துருக்கியுடன் போர் புரிவதில் அவருக்கிஷ்டம் இல்லை.

ஆனால் ஏதோ துருக்கியை, சண்டையின் கொடுமைகளுக்கு பாத்திரமாகச் செய்யக்கூடாது என்கிற ஒரு நல்ல எண்ணத்தின்பேரில் அல்ல; ஏனென்றால், வான்பேபனுக்கும் துருக்கிதேச கவர்ன்மெண்டுக்கும் அந்தரங்க அவநம்பிக்கை உண்டு.

பல்கேரியாவுக்கு ஜெர்மனி ஒத்தாசை செய்த போதிலும், துருக்கி தேசத்திற்கு, ஆங்கிலேய உதவி இருந்தால், துருக்கி பல்கேரியாவை நிச்சயமாக ஜயித்து விடும் என்பதை வான்பேபன் நன்கறிவார்.

மேலும், பாஸ்பரஸ் ஜலஸந்தியில் சண்டை ஏற்பட்டால் அதுவும் ரஷியாவைத் தாக்கும் என்றும், கடைசியாக அச்சண்டையே, ஒட்டகத்தின் முது கெலும்பை முறித்த வைக்கோலாக நேரிடும், என்பதையும் வான்பேப்ன் அறிவார்.

ரஷியா தேசமும், பால்கன் நாட்டு ப்ரச்னையில் சம்பந்தப்படவில்லை என்றும், இதாலி—க்ரேக்கர் சண்டையிலும் யாதொரு விதமான சம்பந்தமும் வைத்துக்கொள்ளவில்லை என்றும், அச்சுநாடு ப்ரசாரம் கூறுவது, பொய்யென்று, ரஷியாவிலிருந்து துருக்கிக்குக் கிடைத்திருக்கும் தகவல்களிலிருந்து தெரிய வருகிறது.

ஐரோப்பாவில் சண்டை வெகு காலம் நடக்கும் என்று எதிர்பார்த்து அதற்குத் தகுந்தபடி ரஷியா செய்திருந்த ஏற்பாடுகள் பூராவும், அதி சீக்கிரமாக பிரான்ஸ் தோல்வி அடைந்தமேல், வீணாய்ப்போனதை அறிந்த ரஷியாவும், இனிமேலாவது, தான் பால்கன் நாடுகளைக் குறித்துச் செய்து வைத்திருக்கும் ஏற்பாடுகளும், கிரீஸ் தேசம் தோல்வி அடைந்தால் வீணாகிப்போய்விடும் என்பதை அறிந்து, அவ்விதம் கிரீஸ் தோல்வி அடையக்கூடாது என்பதைப்பற்றி நிச்சயமான புத்திகொண்டிருக்கிறது.

இதாலி—கிரீஸ் சண்டையில் ரஷியா ஒரு சாதாரணமான வேடிக்கை மட்டும் பார்த்துக்கொண்டிருக்கும் தேசம் அல்ல, சற்று வித்தியாஸமான மனப் பான்மையும் கொண்டிருக்கிறது என்பதற்கு ஸூசகமான சில வதந்திகள் துருக்கிப்ரதேசத்தில் உலாவுகின்றன. அவைகளும் ஒன்றும் எதிர்பாராததல்ல.

ஜெனரல் பாபகாஸ் போட்டிருக்கக் கூடிய திட்டமென்ன?

உயிர் பிழைக்க அச்சு நாடுகள் இனிச் செய்யக்கூடியதென்ன?

(லிவர்பூல் டெய்லிபோஸ்டின் ராணுவ நிருபர் எழுதியது.)

கிழக்குப் பிராந்தியத்தில் யுத்த நிலை அடியோடு மாறி விட்டது. இனி கிரீஸும் பிரிடனும் இந்த யுத்தத்தை வேண்டியபடி மாற்றி அமைக்கலாம். ஜெனரல் பாபகாஸ் தென் அல்பேனியாவை மட்டும் பிடித்துக்கொண்டு, அதிக ஆசைப்படாமல் வட அல்பேனியாவுக்குப்போகாமல் நின்றுவிடலாம்.

துருக்கி ஜெர்மனிக்கு இடம் கொடுக்கவில்லை. ரஷியாவின் ஆதரவைக் கொண்டு பல்கேரியாவும் தைரியமாயிருக்கிறது. இவர்கள் இருப்பதைப்பார்த்து கிரீஸானது தனக்குப் பக்கத்திலுள்ள அல்பேனியாவுக்குக் குறுக்கே கடல் வரை சுவாதீனப்படுத்திக்கொள்ளப் பார்க்கிறது. திரும்ப முடியாதபடி அகப்பட்டுக் கொண்ட விஷயம் இதாலிக்குப் புலப்பட்டவுடன் பலத்த சண்டை நடக்கும்.

இதாலி கவிழ்ந்துவிட்ட கப்பல் போலாய் விட்டது. முடிந்ததைக் காப் பாற்றவேண்டியதுதான் இனிச்செய்யக்கூடியகாரியம். இதாலிய சேனாபதிகளான கேடலும் படோக்ளியோவும் என்ன யோசனைகள் செய்கிறார்களென்று இன்னும் புலப்படவில்லை. இதாலியர்கள் ஸலோனிகாவுக்கு வந்தவுடன் ஜெர்மனி தென் புறமாய்ப் படையெடுக்கக் காத்துக்கொண்டிருந்தது. ஆனால் இப்பொழுது கிரீஸும் அல்பேனியாவும் இழக்கப்பட்டதுடன் இதாலிக்கு ஆபத்து வந்து விட்டது. துருக்கி எச்சரிக்கை செய்கிறது. ரஷியா அலக்ஷியம் செய்கிறது. ஏதாவது ஒரு சிறு தப்பு இப்பொழுது செய்தால் விபரீதமாய் முடியும்; முதலுக்கே மோச மாகும்.

கிரேக்கர்கள் வெற்றியிலிருந்து பல்கேரியா நிலைத்து நிற்கிறது; ஸ்பெயின் திடமாய் விட்டது; துருக்கி யுத்தத்துக்குத் தயாராய் விட்டது. ரஷியாவுடைய ராஜ்ய நோக்கமும் மாறிவிட்டது.

இதாலிய விமானங்கள் சரியாய்ச் சண்டை செய்யாதது இந்த யுத்தத்தில் குறிப்பிடத்தக்கது. இவைகளால் ஒருவிதமான உதவியும் கிடையாததோடு இதாலியத் துருப்புகளுக்கும் அவமானம் ஏற்பட்டது. மேலும் பிரிடிஷ் விமானப்படையைக்கண்டு இதாலிய விமானங்கள் பயந்து விட்டன. இதாலிய விமான நிலயங்களையும் பிரிடிஷ் விமானங்கள் பழுதாக்கி விட்டன.

கதம்பம்.

1. "நாகரீகமற்றவர்களுக்குள் ஒருவனைத்தவிர மற்றெல்லோரும் அடிமைகள்தான்." (கிரேக்கப் பழமொழி).

2. "நாம் நாகரீகமற்றவர்களாகவே இருக்கவிரும்புகிறோம். இரக்கமின்மையும், கல்வியில்லாத்தனமும், வஞ்சனையும், கொடுமையும்தான் நாம் அதிகார ஜாதியாக ஆகுவதற்கு அவசியமானவை. நாம் புத்திசாலித்தனத்துக்கு விரோதிகள்." (அடால்ப் ஹிட்லர்).

3. "கொடுமைச் செய்கையைப்பற்றி ஹிட்லர் அதிகமாக கண்டனம் செய்து பேசுகிறார். கவெண்ட்ரியின் நாசத்திற்குக்காரணமான இவர் இம்மாதிரி மரியாதையுள்ளவரைப்போல் பேசுவது ஸம்பாவிதமாக இல்லை." (க்ளீவ்லாண்ட் உண்மை உரைப்போன் ந்யூ யார்க்கில், நவம்பர் 18).

4. 'நாஸிகளுக்கு எதிர்முறையான சரியான உணர்ச்சியை இந்தியாவில் காண்கிறோம். ஆனால் இந்தியாவில் இதுவரையில் சமாதானம் ஏற்படவில்லையென்பது வியசனிக்கத்தக்கது." (ஸர் எஸ். ராதாகிருஷ்ணன், பாட்னாவில், நவம்பர் 29).

5. "1941-ம் வருஷத்தில் நேசநாடுகளின் விமானப் படையின் உயர்வு நிலை நாட்டப்படப்போகிறதென்று நம்புகிறேன்." (தளகர்த்தர் டி. காலி லண்டனில், டிஸம்பர் 4).

6. "ஜப்பானாவது அல்லது மற்றெந்த தேசமாவது கீழ ஆசியா கண்டத்தின் நாடுகளை முறியடித்து அவைகளை தனக்கு உபயோகப்படும்படி செய்ய நினைக்கிறதென்ற அபிப்பிராயத்தை ஆக்ஷேபிக்கிறோம்." (ஜப்பானின் பர இலாகா மந்திரி மிஸ்டர் மாட்சூகோ, டோக்கியோவில், டிஸம்பர் 8).

7. "நாம் தேர்ச்சி அடைந்திருக்கும் பல விஷயங்களை நமக்கு மேற்குத் தேசம் அளித்ததற்காக நம்முடைய வந்தனத்தைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால், பேராசை போன்ற சில அபிப்ராயங்களையும் உட்கொண்டிருக்கிறோம் என்பது துக்கப்படவேண்டிய சமாசாரம்." (மிஸ்டர் மாட்சூகோ, டோகியோவில், டிசம்பர் 8).

8. "அடிமைகளாக்கப்பட்ட உலகத்தில் இந்தியா சுயேச்சையாக இருக்க முடியாது. இந்தியா சுயேச்சை அடையவேண்டுமானால் பாஸி தத்வத்தை எதிர்த்து சண்டை செய்யும் உலகத்தாரோடு அது சேர்ந்துகொள்ளவேண்டும்." (மிஸ்டர் எம். என். ராய், அம்ரோடியில், டிஸம்பர் 8).

9. "நமக்கு வெற்றி சமீபித்துவிட்டதென்று நான் சொல்லவில்லை. ஆனாலும் ஜெர்மனி வெற்றியடைய முடியாதென்று நிச்சயமாச் சொல்லுகிறேன்." (மிஸ்டர் ஆர்தர் க்ரீன்வுட், லண்டனில், டிஸம்பர் 10).

10. "பிரிடனுடையவும் ஐக்கிய மாகாணங்களுடையவும் விமானப்படையின் வலிமையை ஜெர்மனியின் விமானங்கள் ஒருபொழுதும் அடையமுடியாது." (டாக்டர் பெனஷ், லண்டன், டிஸம்பர் 10).

ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

ஒன்றுமே நடக்கவில்லை.

ஐரோப்பாவில் இப்பொழுது சில நாடுகள்தான் நடுநிலை வகிக்கின்றன. இவைகள் ஜெர்மனி ஏற்படுத்த முயலும் 'புது அரசியலை'ச்சேர மறுத்துவிட்டன. இதை மறைக்க ஜெர்மன் ரேடியோ பலமாய்ப் பேசுகிறது. மூவரசு உடன்படிக்கைக்குப் புது தேசங்கள் சேர்ந்துகொண்டிருக்கின்றனவென்று நவம்பர் 26ல் ஹாம்பர்கர் ப்ரெம் டென்ப்ளாட் சொல்லுவதாக ஒலி பரப்பப்பட்டிருக்கிறது. இந்தப் புது தேசங்கள் எவை? பெயர் என்ன? ஏதாவது ஒரு தேசம் சேர்ந்திருந்தால்தான் ஜெர்மானியர் பகட்டாய் அதன் பெயரைப் பிரசுரிப்பார்களே. இதுவரையில் ஹங்கேரி, ருமேனியா, ஸ்லவோகியாவைத் தவிரவேறு ஒரு தேசமும் சேரவில்லையே. இவைகள் ஏற்கனவே ஜெர்மனிக்கு அடிமைகள். இவைகள் நீட்டிய இடத்தில் கையொப்பமிட்டன.

பல்கேரியாவானது கிரீஸுக்கு இறுதி யுத்த நிருபம் அனுப்பி, கிரேக்கிய எல்லையிலும், துருக்கி எல்லையிலும் துருப்புகளைச் சேர்த்துவைத்திருப்பதாகப் பயமுறுத்துவதற்காக, இங்கிலாந்து பொய்ச்செய்தியைக் கிளப்பிவிட்டிருக்கிறதென்றும், இந்தச் செய்தியை பல்கேரியா மறுப்பதாயும், ஆகையால் ஜெர்மனி மன அமைதியோடிருப்பதாயும் பெர்லின் (ஜெர்மனி) சொல்லுகிறது.

இந்தவிதமான செய்தி இங்கிலாந்திலிருந்து வெளிப்படவேயில்லை. ஆனால் அச்சு நாடுகளோடு பல்கேரியாவைச் சேர்த்துவிட பல்கேரிய மந்திரிகள் பெர்லினுக்குப் புறப்பட்டுக்கொண்டிருப்பதாக, சென்ற வாரத்தில் ஜெர்மனி ஒலிபரப்பியது. இதை பல்கேரியா பகிரங்கமாய் மறுத்துவிட்டது. இதுதான் பல்கேரியா வெளியிட்ட மறுப்பு.

பொதுஜன அபிப்பிராயம், பிறர்கண்ணுக்குப் புலப்படுகிறபடி.

"கிரேக்கர்கள் எதிர்ப்பைத் தடுத்துவிட்டோம்; நாம் திருப்பி எதிர்த்தபோது கிரேக்கர்களுக்கு அதிகச் சேதமேற்பட்டது" என்ற இதாலிய அறிக்கையை ஜெர்மனி டிஸம்பர் 3ல் ஒலிபரப்பியிருக்கிறது.

ஆனால் நடுநிலைமைக்காரர்கள் அபிப்பிராயம் இதற்கு மாறானதென்று கீழே காணலாம். இது ரஷ்யா சேனாதிபதியான கர்னல் பெட்ரோப்பின் அபிப்பிராயம் ரஷ்ய பத்திரிகை கரஸ் நாயஸூயெஸ்டாவிலிருந்து எடுத்து துருக்கி ரேடியோ வெளிப்படுத்திய செய்தி:—

"இதாலிய—கிரேக்க யுத்தத்தில், ஆரம்பம் முதற்கொண்டே இதாலியின் கை ஏறவில்லை. மின்னல் படையெடுப்பால் கிரீஸை வென்றுவிடலாமென்று இதாலியர் நினைத்தது தப்பு. பிரிடிஷ் விமானப்படை உதவிக்குவந்ததிலிருந்து இதாலிக்கு ஆபத்துவந்தது. தங்களுடைய ஆயுதங்களையும், ராணுவ தளவாடங்களையும் கிரேக்கர்களிடம் விட்டுவிட்டு இதாலியர்கள் ஓடும்படி நேரிட்டது. மூன்று வாரங்களுக்குள் அல்பேனியாவில் இவர்கள் நிலைமை ஆபத்துக்கிடமாயிற்று."

ப்ளேமௌத் துறைமுகத்தின் விவரங்கள்.

லண்டன் நகரத்தை அழித்துவிட்டதாக, பலமுறை ஜெர்மன் ரேடியோ பொய்ப்பிரசாரம் செய்துவிட்டது. அதேமாதிரி இப்பொழுது ப்ளேமௌத்தை அடிக்கடி அழித்துவிட்டதாகச் சொல்லுகிறது. ஒருமுறை அழித்த ஊரை மறுபடியும் அழிக்க அவசியமென்ன? எல்லாம் பொய். அது நிற்க, நவம்பர் 29ல் ப்ளேமௌத் ஒரு பெரிய வியாபாரக் கைத்தொழில் ஸ்தலமென்று வர்ணித்து, அங்கிருக்கும் பெரிய மேற்குத்துறை (டாக்)களேயும், காட்டிவாடரையும் சேதம் செய்துவிட்டதாகச் சொல்லுகிறது.

காட்டிவாடர் என்பது ஒரு சிறு வாய்க்கால். பெரிய மேற்குத்துறை, பெரிய துறை என்று அர்த்தமல்ல. பெரிய மேற்கு ரயில்வே என்ற இருப்புப் பாதையோடு சேர்க்கப்பட்டிருப்பதினுல் இதற்கு இந்தப் பெயர் வைக்கப்படிருக்கிறது. இங்கே 12 சிறு கப்பல்களிருக்கத்தானிடமிருக்கிறது. இங்கு சாமான்களைத்தூக்க இரண்டு யந்திரங் (கிரேன்)களும், தான்ய மூட்டைகளைத் தூக்க ஒரு யந்திர (எலிவேடர்)மும்தானிருக்கின்றன. கப்பல்களுக்குவேண்டிய சில்லரைப் பழுதுகள் பார்க்கத்தான் இங்கு வசதிகளுண்டு. அட்லாண்டிக் சமுத்திரத்தில் போகும் பெரிய கப்பல்கள், கரைக்கப்பால் ஆழ்ந்த கடலில் நிற்கும். இவைகளுக்கு வேண்டியவைகளைக் கரையிலிருந்து கொண்டுபோய்க்கொடுக்கச் சிறு கப்பல்கள் செல்லும். இச்சிறு கப்பல்கள் நிற்கமட்டும் இந்தத்துறைமுகம் ஏற்பட்டது. பெரிய கப்பல்கள் துறைமுகத்துக்குள் வரமுடியாது. அதற்கு வெளியே ஒரு மைலுக்கப்பால் நிற்கவேண்டும். இதிலிருந்து இது மிகச் சிறிய துறைமுகமென்று ஊகிக்கலாம்.

ப்ளேமௌத்தை வியாபாரத்திலும், கைத்தொழிலிலும் பெரிதுபடுத்தி, ஜெர்மானியர் சொல்லுவதற்குக் காரணம், தாங்களதைப் பழுதாக்கிவிட்டதாகச் சொல்லிக்கொள்ளுவதற்காகத்தான். ஆனுல் டாமார் நதியின் கழிமுகத்தில் ஹாமோஸுக்கு 5 மைல் உட்புறத்தில் கப்பற்படை தங்கும் பெரிய ராணுவ நிலையமிருக்கின்றது. அதை அணுக ஜெர்மன் விமானங்களுக்கு முடியவில்லே. ப்ளேமௌத்தில் சர்க்கரை சுத்திசெய்யும் சாலேகளும், ஸோப் செய்யும் சாலேகளும், மாவு (ஸ்டார்ச்சு)ச் சாலேகளும், கப்பல் பாய்த்துணி நெசவு சாலேகளும், கண்ணுடி உருக்கும் சாலேகளும், மரம் அமுக்கும் சாலேகளும் இருப்பதாக ஜெர்மன் ரேடியோ சொல்லுகிறது. ப்ளேமௌத்தில் ஒரே ஒரு சர்க்கரை சுத்திச் சாலே முன் இருந்தது. ஆனுல் அதை மூடிவிட்டு, வெகு நாளைக்குமுன்னுல் அதேயிடத்தில் கம்பியில்லாத்தந்தி (வயர்லெஸ்) ஆபீஸ் வைக்கப்பட்டிருக்கிறது. இதையும் யுத்தம் நீடிக்கும் வரை நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. மீன் பிடிக்கும் கப்பல்களுக்காகப் பாய்த்துணி ஒரு சிறு அளவு இங்கே நெய்யப்படுகிறது. மீன் பிடிக்கும் கப்பல்கள் 20-தானிங்கிருக்கின்றன. ஒவ்வொன்றும் 40 அடி நீளம்தானிருக்கும். ஸோப் பாக்டரியில் 500 பேர்கள்தான் வேலே செய்கிருர்கள் ப்ளேமௌத்துக்கு உள்ளூர் உபயோகத்துக்காகவேண்டிய மரம்தான் இறக்குமதியாகின்றது.

ஜெர்மன் பொய் ஜெர்மனி ஒலிபரப்பிலிருந்தே வெளியாகிறது.

மழை, பனியில்லாத காலத்தில்தான் பிரிடிஷ் விமானிகள் வெளிவருவார்களென்றும், மழை, மூடுபனி, புயல் எதாயிருந்தாலும் ஜெர்மன் விமானிகள் படையெடுத்துத் தகர்த்துக்கொண்டிருப்பார்களென்றும் நவம்பர் 27ல் ஜெர்மனி ஒலிபரப்பிற்று.

அதற்கு இரண்டு நிமிஷங்களுக்கு முன்னால் அதே ரேடியோ, மழைக் காற்றினால் திங்கட்கிழமை இரவிலும், நேற்றும் படையெடுக்கமுடியாது, வேவு மட்டும் பார்த்து, விமானங்கள் தனியே பறந்து செய்யக்கூடிய காரியங்களைச் செய்ததாகச் சொல்லிற்று.

கட்டுக்கண்ணும்பூச்சி விளையாட்டு.

பிரிடிஷ் அறிக்கைகள் பொய்யென்று அயல் நாட்டு நிருபர்களுக்கும், ராணுவஸ்தர்களுக்கும் நிரூபிப்பதற்காக, விமான வெடிகளால் வெகு சேதமடைந்திருக்கும் பெர்லின் தலைநகருக்குக் கூட்டிக்கொண்டுபோய்ச் சேதப்படாத சில இடங்களை மட்டும் காண்பித்தார்கள். அயல் ஊரார்கள் கண்ணைக்கட்டியதுபோல் காட்டிய இடத்தைப் பார்த்துவிட்டு ஒரு இடத்தில்கூட ஒரு பழுதுமேற்படவில்லை என்று சொல்லிவிட்டதாக நவம்பர் 26ல் ஜெர்மன் ரேடியோ பிரஸ்தாபம் செய்தது என்ன விநோதம்.

B—ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பு.

ஒத்துப்பார்த்தால் தெரியும்.

(*a*) பிரிடனில் ஆகாரக்குறைவு ஏற்பட்டுவிட்டதாயும், குடிக்கப்பால் கிடைக்கவில்லையென்றும் நவம்பர் 29ல் ஜெர்மனி மறுபடியும் பொய்ப் பிரசாரம் செய்தது.

உண்மையில் பால் திட்டம்போட்டுக்கூட பிரிடனில் விற்கிறது கிடையாது. யுத்தத்திற்குமுன் இருந்ததைவிட 100-க்கு 14 பங்கு அதிகமாக இப்பொழுது பால் செலவாகிறது. 'பால் வியாபாரக் கடைகள் ஆயிரக்கணக்காயிருக்கின்றன. கர்ப்பிணிகளுக்கும், பாலூட்டும் தாய்களுக்கும், மாணுக்கர்களுக்கும், 5-வயதுக் குட்பட்ட குழந்தைகளுக்கும் குறைந்த விலைக்குப் பால் விற்கப்படுகிறது. இனாமாகவும் கொடுக்கப்படுகிறது.

(*b*) பிரிடனில் இறைச்சி உணவும் மட்டுக்கட்டிவிட்டதாகச் சொல்லுகிறார்கள். இதுவும் பொய். நிறைப்படித் திட்டம்போட்டு இறைச்சி விற்கப்படவில்லை. ஒருவருக்கு ஒரு வாரத்துக்கு ஒரு ஷில்லிங் 10 பென்ஸ் பெறுமான இறைச்சி விற்கப்படுகிறது. இது யுத்தத்துக்கு முன் ஏற்பட்ட கணக்குக்கு ஏறக்குறைய சமமானது.

ஜெர்மனியில் உணவுப்பஞ்சம் ஏற்பட்டு நவம்பர் 15ல் நாய் இறைச்சியைச் சாப்பிடலாமென்று சட்டமிட்டு, டிஸம்பர் முதல் தேதியிலிருந்து விற்கப்பட்டு வருகிறது. ஏற்கனவே ஜெர்மானியரின் உணவு கேவலமானது. நாய் இறைச்சியைப் பரிசோதனைசெய்ய உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களாம். மாட்டு இறைச்சிக்கு நாய் இறைச்சி சமமென்று கண்டுபிடித்திருக்கிறார்களாம்.

செல்வமும், பொய்யும்.

பிரிடன் கையிருப்பில் டாலர் நாணயம் மட்டுக்கட்டியிருப்பதைப்பற்றி லோதியன் பிரபு பேசியதைப் பிரமாதப்படுத்தி, அராபியில் நவம்பர் 27-ம்தேதி ஒலிபரப்பில் இதாலி நரியானது ஊளையிடுகிறது. 1,000,000,000 பவுன் பெறுமான சரக்குகளுக்காக பிரிடன் அமெரிக்காவுக்கு ஆர்டர் கொடுத்திருக்கிறது. இவ்வளவு பெரிய தொகைக்குப் போதுமான டாலர் ரொக்கமாக, கையிலில்லாமலிருப்பது சகஜமே.

அமெரிக்காவில் வாங்கும் சரக்கு ஒவ்வொன்றுக்கும் கையில் ரொக்கம் கொடுத்து வாங்கப்படுகிறது. அயல்நாட்டு நாணயம் கையிருப்பைப்பொறுத்து ஒருவனுடைய ஐச்வர்யத்தை மதிக்கக்கூடாதென்று ஒவ்வொரு வியாபாரிக்கும், முதலாளிக்கும் தெரியும். இப்பொழுது நடக்கிறமாதிரி பல வருஷங்கள் யுத்தம் நடந்தாலும் பிரிடனுக்குச் செலவுசெய்யப் போதுமான செல்வம் இருக்கிறது. கையிருப்பு நாணயம் மட்டுக்கட்டினதால், யுத்தத்தளவாட உற்பத்தி அமெரிக்காவில் குறையாதென்று மான்செஸ்டர் கார்டியனுடைய நியுயார்க் நிருபர் தந்தி கொடுத்திருக்கிறார்.

பழைய பித்தலாட்டம்.

அயல்நாட்டு நிருபர்களைப் பொறுக்கிய இடங்களுக்குக் கூட்டிக்கொண்டு போய்க் காண்பித்து, தங்களுக்குவேண்டியபடி எழுதச்சொல்லுவது ஜெர்மானியருடைய வெகுநாளையப் பித்தலாட்டம். இதைச் சில மாறுதல்களோடு இதாலியரும் கைப்பிடித்து ஸார்டீனியாவுக்கப்பால் நடந்த கடல் யுத்தத்தில் பழுதுபட்ட கப்பல்களை நிருபர்களைக்கொண்டு பார்க்கச்சொன்னதில், அவர்கள் கப்பல்களுக்குப் பழுது ஒன்றும் ஏற்படவில்லையென்று சொன்னதாக டிஸம்பர் 2-ம்தேதி அறிக்கை தெரிவிக்கிறது. இந்த அறிக்கையில் (1) நிருபர் பெயர் கிடையாது; (2) பத்திரிகைகள் பெயரும் கிடையாது; (3) கப்பல்கள் பெயரும் கிடையாது; (4) நிருபர்களை வாஸ்தவமாகவே கூட்டிப்போயிருந்தார்களோ என்னவோ, சண்டைக்கே போகாது பழுதுபடாத மற்றும் சில கப்பல்களையும் காட்டி ஏமாற்றினார்களோ என்னவோ. இதாலியர்கள் சண்டையில் கலந்துகொள்ளும் கப்பல்களின் பெயரைச் சொல்லுவதில்லை. பிரிடன் பெயர்களைக்கொடுக்கும். உதாரணமாக ஸார்டீனியாவுக்கப்பால் நடந்த சண்டையில் பிரிடிஷ் கப்பல்கள் ஆர்க்ராயல் சம்மந்தப்பட்டது.

டாரண்டோ சண்டையில் ஏற்பட்ட பழுதில் இதாலியர்கள் ஒரு சிறு பாகத்தைத்தான் ஒப்புக்கொண்டார்கள். ஆனால் பிரிடிஷ் அறிக்கை உண்மையென்று எடுத்துக்காட்டப் படங்கள் பிடித்து ருஜுக்கொடுக்கப்பட்டது. அதோடு ஜெர்மன் பத்திரிகையான பிராங்க்பர்டர் ஸீடங்கினுடைய ரோம் நிருபர், "உண்மையில் டாரன்டோஸம்பவம் மிகத் துக்ககரமானது. ஒன்றுக்கும் பயப்படாத சில பிரிடிஷ் விமானிகள் முரட்டுத்தனமாய் டார்பிடோக்களைப்போட இளம்பர்வத்திலிருக்கும் இதாலியக் கப்பற்படைக்குப் பழுது ஏற்பட்டது. இதைச்சரிப்படுத்த வெகுநாள் பிடிக்கும்."

புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரஸங்கம் XXIII.

1940—				மணி.
டிஸம்பர் 14, சனிக்கிழமை ...	டவுன் ஹால்	...	மாலை	6.30
15, ஞாயிற்றுக்கிழமை.	வயலோகம்	...	காலை	9.45
	கோட்டைக்காடு	...	காலை	9.45
16, திங்கட்கிழமை ...	பெருங்களூர்	...	மாலை	5.00
	அரிமளம்	...	,,	5.00
17, செவ்வாய்க்கிழமை.	திருக்கோகர்ணம்	...	,,	5.30
	சேரி பள்ளிக்கூடம்	...	,,	5.30
	குடுமியாமலை	...	,,	5.30
	காரையூர்	...	,,	5.30
19, வியாழக்கிழமை ...	பனையப்பட்டி	...	,,	5.30
20, வெள்ளிக்கிழமை...	கோனாபட்டு	...	,,	5.00

பிரஸங்கம் XXIV.

டிஸம்பர் 21, சனிக்கிழமை ...	டவுன் ஹால்	...	மாலை	6.30
22, ஞாயிற்றுக்கிழமை.	ஆலங்குடி	...	,,	5.30
	கீரனூர்	...	,,	5.30
	விராச்சிலை	...	,,	5.30
	ராமச்சந்திரபுரம்	...	,,	5.30
23, திங்கட்கிழமை ...	புதப்பட்டி (பொன்னமராவதி).		,,	5.30
	ராயவரம்	...	,,	5.30
	ஏம்பல்	...	,,	5.30
	வேங்கடக்குளம்	...	,,	5.30

இந்தியாவின்
பாதுகாப்புக்கு உதவுங்கள்

பாதுகாப்பு சேமிப்பு ஸ்டாம்புகளை தவருமல் வாங்குங்கள்.

ஒரே சமயம் 10 ரூபாய் கொடுத்து பாதுகாப்பு சேமிப்பு சர்டிபிகேட்டை வாங்க முடியாதவர்களுக்கு இந்தியா கவர்ன்மென்டார் ரூ. 1, அ. 8, 4 விலை பெருமான பாதுகாப்பு சேமிப்பு ஸ்டாம்புகளையும், கார்டுகளையும் வெளியிட்டிருக்கின்றனர். கார்டுகளில் இந்தவிதமான ஸ்டாம்புகளை ஒட்டுவதற்கு இடம் விடப்பட்டிருக்கிறது. 10 ரூபாய் விலை பெருமான ஸ்டாம்புகளை சேர்த்த பிறகு போஸ்டாபீசுக்கு கார்டை எடுத்துக்கொண்டு போய் பாதுகாப்பு சேமிப்பு சர்டிபிகேட்டுக்காக கொடுத்து மாற்றிக்கொள்ளலாம்.

இந்த விதமான ஸ்டாம்புகளும், கார்டுகளும் சேமிப்பு நிதியை வைத்திருக்கும் எந்த தபாலாபீசிலும் கிடைக்கும்.

பாதுகாப்பு சேமிப்பு கார்டுள்ள ஒவ்வொருவரும் தம் பெயரையும், விலாசத்தையும் கையொப்பம் அல்லது பெருவிரல் குறியையும் ஸ்டாம்புகள் ஒட்டுவதற்கு முன்பு கார்டின்மேல் எழுதவேண்டும். சர்டிபிகேட்டையுடையவர் பாதுகாப்புக்காக இந்த எச்சரிக்கை அவசியம்.

பாதுகாப்பு சேமிப்பு சர்டிபிகேட்டுகள் ரூ. 10, 50, 100, 500 வரையில் கிடைக்கும். 10 வருடங்களின் கடைசியில் 100க்கு 3¼ ரூபாய் வீதம் வட்டிக்கு வட்டியாக வருமான வரி இல்லாமல் ஒவ்வொரு பத்து ரூபாய்க்கும் ரூ. 13-9-0 ஆக கிடைக்கும். எந்த வழியிலும் சேமிப்பு தொகை குறையாது. ஒவ்வொருவரும் 5000 ரூபாய் வரையில் போடலாம். அருகாமையிலிருக்கும் தபாலாபீசில் விசாரிக்கவும்.

யுத்த சேமிப்பு இயக்கத்தாரால் வெளியிடப்பட்டது.
தபால் பெட்டி 11, சென்னை.

Sri Brihadamba State Press, Pudukkottai. 4,400—14-12-40.